T.1247.

Light of Truth in Saivism—A Philosophical Work

# RESEARCH

OF

# SAIVA SIDDHANTA

## IN TAMIL

BY


S. K. SATCHITHANANDAN


BY THE REQUEST OF

FLUTE VIDWAN M. R. NATHAMUNI

Tutor of Music and Author of 'Sangeetha Swaraprasthara Sagaram' in Telugu.


PUBLISHED BY

FLUTE VIDWAN M. R. NATHAMUNI

PRINTED AT THE

C. N. TECHNICAL INSTITUTE PRESS, VEPERY MADRAS.

1925

First Edition.] *Registered copy right.* [Price Rs. 2

சைவசமய வுண்மை விளக்கம்—ஒரு தத்துவ வாராய்ச்சிநூல்

# சிவப்பிரகாசம்

என்னுஞ்

# சைவ சித்தாந்த ஆராய்ச்சி

இஃது

சோழ. கந்த. சச்சிதாநந்தனார்

இயற்றியது

சங்கீத ஸ்வர ப்ரஸ்தார சாகர நூலாசிரியரும்

இசைவல்லுநருமாய

குழல் வித்வான் மா. ரா. நாதமுனி

விருப்பத்தின்படி

குழல் வித்வான் மா. ரா. நாதமுனியால்

பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது

1925

முதற்பதிப்பு]  ரிஜிஸ்தர் செய்தது  [விலை ரூ. 2

# சிறப்புப்பாயிரம்

சிவமாங் கடவுளைப் பற்றி நான் தெரிந்து கொள்ள முயற்சி செய்துகொண் டிருக்கையில் சமயசம்பந்தமான சில புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பார்த்து வந்தேன். அவற்றில் மெய்ப் பொருளின் உண்மைநிலை யுள்ளபடி யுரைக்கப்படவில்லை. மேடைகளேறி சமயப் பிரசங்கங்கள், பாடங்கள் நிகழ்த்தும் சில புலவர்களின் வாயுரைகளையுங் கேட்டேன். அவ்வுரைகள் முன்னுக் குப்பின் முரண்படுவனவாகவும், பொருத்தமற்றனவாகவு மிருந்தனவே தவிர தேறுதலான முடிவு ஒன்றும் ஏற் படவில்லை. அவற்றைக் கேட்டதற்கு மனஞ்சலித்தது தான் பயன். பின்னர், சிவத்தைப்பற்றி பொருவாறு தீர்மானித்துக் கொண்டேனாயினும் அவ்விஷயத்தில் தீரா வையமே யிருந்தது.

எப்பொருளைப்பற்றியறிய மனம் விடாமுயற்சி செய் துவந்ததோ அம்முயற்சியின் பலனாக நல்லாசிரியரான திரு-சச்சிதாநந்தனார் அவர்களின் நட்பு உண்டாயிற்று. அவர் செம்பொருளின் இலக்ஷணத்தையறிய பல மகநூல் களை யாராய்ந்திருப்பதாக நானறிந்து என ஐயங்களை யவரிடஞ்சொன்னேன். சிலதினங்களில் எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நீக்கியதோடு உண்மைப் பொருளைப்பற்றி நானறியுமாறு நன்கு விவரித்தார்.

செம்பொருளைப்பற்றி நான் தேறுதலடைந்த மகிழ்ச் சியால் முன்னர் நிகழ்ந்ததை யோசித்து வருகையில் இக் காலத்திலும் இன்னும் பழம் பாட்டிக் கதைகளைச் சொல் லிக்கொண்டு வருகிறார்களே இவற்றைக் கேட்டவர்க்கு

என்ன தேறுதலுண்டாகப் போகிறது நம்மைப் போல் தான்மனச்சலிப்பையடைவார்கள் இக்குறையை யொழிப்பதே நலமென்றெண்ணி குருகுலவாசத்திலும் ஆராய்ச்சியிலும் சிறந்தவரான இவ்வாசிரியரை யெவர்க்கும் உண்மை விளங்கும்படி நூலொன்றுசெய்து தருதல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன். அவர் என் கருத்துக் கிணங்கி யங்ஙனமே செய்ய வுடன்பட்டார்.

நம் சைவசமய சாஸ்திரங்களிலும் அருளாளர் நூல்களிலுமிருந்து பிரமாணங்கள் சகிதம் உண்மைப்பொருள் சிறந்துவிளங்கும்படி சிவப்பிரகாசம் என்னுஞ் சைவ சித்தாந்த ஆராய்ச்சி யென்னும் பெயரால் இந்நூலை யெழுதி முடித்தார்.

இக்காலத்திற்குப் பொருந்துமாறு தெள்ளிய நடையில் எழுதப்பட்ட இந்நூலில் அடங்கிய விஷயங்கள் ஒன்றற்கொன்று தொடர்ச்சியாயும், பொருள் விளக்கங்களும் பலவிடங்களில் அரியவுரைகளும், ஒப்பிட்டுரைக்கும் உரை விசேஷங்களும் அமைந்திருக்கின்றன.

தரும சாஸ்திரங்களும், மருத்துவ நூல்களும், சமய சாஸ்திரங்களும் உண்டானதைப்பற்றி உடல் நலம், மனநலம் என்னும் இயல்களிலும்; ஞாதுரு ஞான ஞேயங்களென்னும் அறியும் பகுதிகளைப்பற்றி சிவஞான வியலிலும்; சித்தத்தைப் பற்றிய மலங்களறப்பெறுவது ஞானத்தாலென்று மும்மலநீக்க வியலிலும்; சிவதரிசன சிவவடைவுகளைப்பற்றி சிவப்பிரகாச வியலிலும்; யோக சித்த ஞானிகள் சுத்த ஞானிகளின் முடிவு நிலையைப் பற்றி ஞானிய ரென்னும் இயலிலும்; அறிவு வளர்ச்சி

யைப் பொருத்தவை பிறவிகளும் பிறப்பின்மையுமென் பது முதலியவைபற்றி உலகாக்க வியலிலும்; ஞானு னுஷ்டானத்திற்கான முறைகளை அநுபவத்திற்கேற்பத் தொகுத்தவை ஞானமுறைத் தொகுதி யியலிலும் ஆய்ந்த மைத்த ஆராய்ச்சி விசேஷங்கள் மிக்க அருமையானவை. மற்றுள்ள இயல்கள் ஒவ்வொன்றும் உண்மைப் பொரு ளைக் காட்டுவதில் இணையற்றவை.

உண்மையை யுணர்ந்த ஞானிகளை யடுத்து அவரிடம் வசித்து உண்மையை யறியவேண்டிய நங்கடமை தக்கார் வாய்க்காமையால் தவறி யிதுவரை வீணாகக் காலங் கடத் தப்பட்டுப் போயினும் தத்துவஞானியையடுத்து வாசஞ் செய்து அரிதில் பெறக்கூடிய அரியபெரிய பொருளை எளிதில் உணரவும், நாமெல்லோரும் பெரும்பயனையும் பேரின்ப வீடு பேற்றையும் அடையவும் இந்நூல் செய்யு மென்பது திண்ணம். இந்நூற்பொருளைக்கற்றறிந்தவர்கள் சைவ சமய நவீன நூல்களை நிஷ்பிரயோஜன மானவை யென்றே யுறுதியாய்க் கருதுவார்கள்.

இந்நூலை யெழுதி யென் விருப்பத்தை நிறைவேற் றிய இந்நல்லாசிரியரான வுத்தமருக்கு நாம் நன்றியறித லு டையவராயிருப்பதோடு இந்நூலைப்படிக்கும் ஒவ்வொரு வரும் தம்மையடுத்துள்ள ஆண்பெண்ணிருபாலார்க்கும் பொருளைவிளக்கி யிப்பிறப்பு வீணாகாதபடி வீட்டின்பத் தை யடையுமாறு செய்யவேண்டியது நங் கடமையாகும். ஆகையால், இவ்வருமையான நூலானது எல்லாருடைய கரதலங்களிலும் இருந்தால் மேற்குறித்த பலன்கள் உண்டாகும்.

மா. ரா. நாதமுனி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| பதிகம் | ... | 1 |
| கடவுள் வாழ்த்து | ... | 5 |
| உடனலம் | ... | 5 |
| மனநலம் | ... | 6 |
| சைவசமயம் | ... | 7 |
| கோயிற்குறிப்பு | ... | 8 |
| நந்திக்குறிப்பு | ... | 18 |
| சிவக்குறிப்பு | ... | 21 |
| நாகக்குறிப்பு | ... | 26 |
| ஆண்டானடிமைத்திறம் | ... | 30 |
| சிவஞானம் | ... | 32 |
| மும்மலநீக்கம் | ... | 42 |
| சிவப்பிரகாசம் | ... | 45 |
| சித்தாந்தம் | ... | 53 |
| ஞானியரியல் | ... | 57 |
| ஞானியரைப் பேணுவார் பெறும் பயன் | | 58 |
| ஞானியரீறு | ... | 59 |
| உலகாக்கம் | ... | 62 |
| ஞானமுறைத் தொகுதி | ... | 65 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவப்பிரகாசம்

என்னுஞ்

# சைவசித்தாந்த ஆராய்ச்சி

## பதிகம்

பொன்னெனத் திகழுந்தென் னிந்திய நாட்டிற்
புவிக்கெலா மருளும் புனிதமாஞ் செந்நெறி
முன்னை நாட்களின் முளைத்து வளர்ந்து
சிவமெனு மெய்ப்பொருண் முழுமுத லெனவுந்
தவஞான மென்பது சார்நெறி யெனவுஞ்
சிவஞான முற்ற சீரிய முன்னோர்
அவஞான மிரிய வருளாற் றெரித்த
சமய நூற்பல வமைய வாய்ந்து
இரும்பொரு டெரிந்து அரும்பொரு ளுரைக்க
உண்ணின் றாக்கு மொருமுத லடிதனை
எண்ணி யிந்நூ லெழுந்ததா மென்க.
இந்நூ லுடனல மெழின்மன நலமும்
அரிய மனநிலை யறநூன் மதநூல்
சார்ந்தெழு தோற்றமுஞ் சமயப் பொருளாங்
கோயி னந்தி குலவு சிவக்குறி

ஆன பாச வரும்பசு பதியாம்
அவற்றின் பொருளு மாவக் கூறியும்
ஆளடிமைத் திறமு மார்சிவ ஞான முந்
திரிமலத் தீர்வுஞ் சிவப்பிர காசமு
நான்முடி பொருளா நுணுகுசித் தாந்தந்
தேறிய ஞானியர் சீலமு மவரைப்
பேணுவார் பேறும் பெரியவ ரீறும்
அவனி யாக்க மாதிய வளத்துமே.
திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர்
சுந்தர மூர்த்தி தூமணி வாசகர்
திருமூலர் மந்திரம் திருமாளிகைத் தேவர்
வள்ளுவர் திருக்குறள் ஔவை யருட்குறள்
சிவதரு மோத்தரஞ் சிவஞான போதஞ்
சிவஞான சித்தியார் திருவுந்தியா ரருட்பயன்
களிற்றுப் படியார் காரைக்கா லம்மை
பட்டினத்துப் பிள்ளையார் பத்திர கிரியார்
அருணகிரி நாதர் தாயு மானவர்
பெரிய புராணம் பிறங்கு * மேனாட்டு
முன்னை யாய்வினர் மொழிசிவப் பிரகாசம்
என்னுஞ் சைவ வினியசித் தாந்த
ஆராய்ச்சி நூலீ தடையுமேற் கோளே.
எந்தையாய் மெய்ப்பொரு ளியலறி வித்த
சிந்தை சிவம்பாற் சேர்த்த சீரியர்க்
காக்குவ னிந்நூ லமைப்புரிமையே.
என்னுட னாகி யிலகுபொரு ளாய்வின்

* மேல்நாட்டுப் பழைய தத்துவ ஆராய்ச்சியாளர் மொழிகள் 'சக்ரவர்த்தினி,' 'செந்தமிழ்ச் செல்வி' பத்திரிகைகளில் வெளிவந்தவை.

மன்னி யுசாவி மாண்பொரு டேடி
இந்நா னிலவ லிளைவித்த விசைவலோன்
வடிக் மொழியில் வளரிசைக் கடனூல்
ஆக்கியோ னுண்ணறி வாய்ந்த மாண்பினன்
நாதமுனிப் பெயரோ னற்பாண்டித் தியனே.
ஆயுந் தமிழி லார்வம் பெருகி
பொறியிற் பொறிதரப் பொற்புற வரைந்தும்
ஒப்ப நோக்கியு முதவிய வன்பர்
நடராஜ நாயக னற்கிருஷ்ண சாமி
நாயு டவர்நன்றி நானுநா டுவனே.
உறுகுறை பொறுக்க வுலகம்
உயர்பொரு ளாயி னுயிர்மடுத் தோங்குமே.

சச்சிதாநந்தன்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவப்பிரகாசம்

என்னுஞ்

# சைவசித்தாந்த ஆராய்ச்சி

## கடவுள் வாழ்த்து

சிவப்பிர காசத் தெருளமிழ் தூறிச் செறிதரவே
தவப்பிர காசந் தருசிவ சித்தாந் தநூற்பொருளால்
அவப்பிர காச மவிய நிறைவுறு மாய்வறிவா
நவப்பிர காச நயம்வரு ஞான நலந்துணையே.

## உடனலம்

உலகி னிறைந்த அலகில் உயிர்வருக் கங்களில் ஒழுக் கமுறை யறிந்து உடனல முதலியவற்றால் மக்கள் உலக வாழ்வின்பத்தை யுயர்த்திநுகர்வர்.

மக்கள் தம் உடம்பைச் செவ்விதாயிருக்கப்பெற வாய்த்த விதிகள் அறநூல்களென்னுந் தரும சாத்திரங் களில் உள்ளன. உடம்புக் கழிவுண்டாக்கும் மாசுமுத லியவை நீக்கப்பெறுதலும்; மக்களினத்தில் உடல் களின் வேறுபாட்டானும், மிகுதியான பயிற்சியானும்

பிணியுறு முடற்பொருத்தத்தானும் உடலைப் பொன்று விக்கும் பிணிகளுண்டாகிச் சார்பினர், சந்ததியார், உடனுறைவார் முதலிய வினத்தாரையு மழிவுறுத்தலின் அவ்வூறுபா டெய்தாதிருத்தற்காக ஆடவமாதர் மணம் புரிதலும், பிறவிடஞ் சாராதிருத்தலுமாய விவைமுதலியன அறநூல்களில் விதி விலக்குகளாகத் தோன்றியுள. மாதராடவர்க்கான கற்பொழுக்க விதிகளும்; உடற்றூய் மையாதிய ஆசாரநெறிகளும்; உண்ணலருந்தல் முதலிய வுண்டிவகை யளவுவிதிகளும்; கட்குடி, பொது வயன் மகளிர் கூட்டமுதலிய விலக்குகளும்; வெயில், பனி காற்று, மிக்க நடை, உறக்க மிகை முதலியவற்றால் நோவுறாதவண்ணம் இருத்தற்கான முற்காப்பாய மருத்துக் குறிப்புக்களும் ஒழுக்க முறைகளாக வுண்டாயின. உடற்கழிவுண்டாக்குகின்ற நலமற்ற நடைகள் நீக்கப்படவும் நன்மைவிளைப்பன வேண்டப்படவு முரியவிதிகள் அறநூல்களில் ஒரு பகுதியாக வுள்ளன.

## மன நலம்

உடம்பாய பாவையை யாட்டி வைப்பது மனமென்னுஞ் சூத்திரக் கயிறாகையால் மனம் அலைவு, துன்பம் விசாரம் அடையின் உடல் பிணியுற்று வாழ்வைத் துன்பமாகப் பொருந்தும்.

அது: பொய்புரை, புறங்கூறல், மெய்ந்நடையின் பிறழ்ச்சி, கோளுரை, சினமுறல், கொலை, களவுமுதலிய தீய நடைகளான் மனத்தடுமாற்றமும் அதனால் உடம்புறு நடுக்கம், மார்படிப்பு, காய்ச்சல், மிரட்சி, வயிற்றுப்

போக்கு முதலியனவும் உடலை யழிப்பனவாக அவ்வளவை பற்றி யவற்றினின்றும் காத்தற்காக மெய்புரை, பொறை யுடைமைமுதலிய நல்லற விதிகளும்; தீயொழுக்க விலக்குகளும் அறநூல்களில் மறு பகுதியாக மனத்தின் செம்மைக்காகத் தோன்றியுள.

மனிதவினக் கூட்ட வாழ்வில் மக்கள் தமக்குந் தம் மைச் சேர்ந்தவர்க்கும் நேரும்பிணி, இடுக்கண், அழிவு முதலியவற்றைக் கண்டு கவலையுற்றும்; கொள்ளைநோய் அஞ்சத்தக்க காட்சி, திடுக்கிடும் ஓசை, அச்சுறுத்தும் எண்ணவெழுச்சி முதலியவற்றால் மனமாகிய சூத்திர நாண் சலனமுற்று இதனால் உடம்பு பிணியுற்ற போது மனத்தை நிலைபெறுத்தவும் அலைவு, கவலை யிவற்றை யகற்றவுந் திடம்பெறவும் உருவ வழிபாடு, ஜெபதபதி யான கன்மானுட்டானங்கள் மதநூல்களின் ஒரு பகுதி யாகத் தோன்றியுள.

## சைவ சமயம்

தெய்வம், பிரார்த்தனை, வழிபாடு, கோயில் முதலி யன பல்வேறு பிரிவுகளாகப்பெற்ற மதத்தையே முற் காலத்தில் பெருமக்கட் பரப்பு கைக்கொண்டு வந்தது.

மனிதர் வெவ்வேறான விருப்பமுடையவரா யிருப் பதால் அவரவர்கள் கூட்டங் கூட்டமாக அவரவர் இச் சிக்குந் தெய்வங்களையும், வேறுவேறு வழிபாடு பூசனை களையும், பல்வகை மூர்த்தங்களையும், பல்வகை கோயில் களையு முடையவோர் பெரிய மதம் தோன்றி வளர்ந்ததா கும். அது, விநாயக சுப்ரமண்யாதி உபதெய்வ மூர்த்தங்

களும், சிவசக்தியின முதலிய முதன்மையவான தெய்வ மூர்த்தங்களுமாயவற்றை யுடையதாய் மதச் சின்னங்களாய திருநீறு, குங்குமம், சந்தனம், உருத்திராக்க முதலிய வற்றையும்; பூ, கருப்பூர, பழந், தேங்காய் முதலிய வாராதனை சாமக்கிரிகளேயும் ஒரேவிதமாகக் கொண்டிருப்பதுமாய சைவசமயம் அளவிறந்த மக்களால்தழுவப்பெற்றுளது.

சைவ சமயம் இந்திய நாட்டில் பழைய காலத்துண்டாகி, தென்னுடகன்றிருந்த போது எண்ணற்ற விந்திய மக்களால் கைக்கொள்ளப்பட்டு வந்ததோ டமையாமல் இந்திய நாட்டுக் கப்பாலான நாடுகண் முழுதினுமே இம்மதச் சார்புகளான பிறமதங்களிலும் உருவவழிபாடு, திருநீறு, புட்பம், தூபதீபம், மணியோசை முதலிய சைவச் சின்னங்கள் ஒழுக்கத்தி லிருந்துவருவதால் முற்காலத்தே யிம்மதம் தலைசிறந்து பெருந் தொகையாய மக்களைத் தன்சார்பில் பெற்றிருந்து வந்ததெனவறியவுளது.

சைவசமயச் சின்னங்களான தேவாராதனையான நீறு பூசப்படுவதாலும், பூ மணக்கப் படுவதாலும், தூபம் உடம்பின்மீது வீசப்படப்பெறுவதாலும் உடம்பின் கேடு ஒழிவதாகக் கருதப்பட்டு அத்திட நம்பிக்கையால் மனஞ் செம்மையுற்று அதனல் இனிமை யெய்துவது உய்த்துணரற் குரியது.

## கோயிற் குறிப்பு

மனம் உலகின் சேர்க்கையால் உடம்பு, உயிர்ப்பென்னுஞ் சஞ்சரிக்கும் பிராணதி வாயுக்கள், இந்திரியங்கள்

முதலிய வற்றைத் தன் வடிவமெனக்கருதி, யின்பதுன் பங்களுக்கீடாகி, யதனால் வாழ்க்கையில் அமைதியும் ஆறுதலு மின்றியதா யுள்ளது.

மனம் உலகவாழ்விலும், உடம்பிலும், உடம்பின் காரணமாகப் பொருந்திய வுறவிலும் அதன் பயிற்சிப்பொருளிலும் பழக்க முற்றமையால் மெய்ப் பொருணாட்டமின்றி, யுலகநாட்டமே யுடையதா யுலகபாசத் துழன்று வருகிறது.

மனம் தனக்கு வேருகவுள்ள வுடம்பைத் தன்வடிவமாக மாறுபடக்கருதி, யுடலை நானெனப் பற்றுற்றிருத்தலும், இன்பதுன்பங்களை விளைவிக்கிற நல்வினை தீவினைகளைச் செய்து வருதலும், உலகபோக வாழ்க்கை யுடைமையும் ஆணவங் **கன்மம் மாயை** யென்னப்படும். இம்மூவகையாய மலங்களெனுங்குற்றங்களை மனமுறுவதனால் உயர் தனிமுதற் பொருளை யறிய வல்லதன்று.

மனம் உலகவாழ்வின் ஆக்கத்தில் ஆசையும்,அடைந்துள்ள வாழ்வில் பற்றும் நீங்கப் பெறவும்,உடம்பு முதலியவற்றைத் தன்வடிவ மெனக்கருதிய மாறுபாடு கழலவும் அதனால் மாரு வின்பநிலையைச் சேரப் பெறவுங்கூடிய முடிபான நெறியே மதநூல்களின் மறுபகுதியா யுள்ளது.

உறுதி நெறி கூறப்படுகிற மதநூல்களின் மறுபகுதியால் மனம் உயரிய நிலையுற்று, உண்மைப் பொருளோடியைபைப்பெற்று நிலைத்தலை விளக்கி யிருப்பினும் கற்றூர் மற்றூராய விருதிறத்தாரும் மதமுடிபை யறியுமாறு அடையாளப் படம்போலவும், சிறுமியர் மணலில் சிற்றில்

கோலி யில்லக்குறி காட்டுவது போன்றும் கட்டப்பட்டுள்ள கோயில்கள் ஆய்ந்தறியத் தக்கவை.

சிவாலயங்கள் பஞ்சபூத வுலகப் பொருள்களா லாக்கப்பட்டுள்ளன. இவ்வாலயங்கள் ஐம்பூதப் பெயர்களால் வழங்கப் படுகின்றன.. பஞ்ச பூதங்களால் மக்கள் முதலிய வுயிர்களின் உடம்பு ஆகியுள்ளமையின் உடம்பும் உடம்பைக் குறிப்பிடும் ஆலயமும் பாசத்தைத் தெரிக்கின்றன. பஞ்சபூதத் தலங்களாகச் சில க்ஷேத்திரங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. வான், வளி, தீ, நீர், நில தலங்களாக ஐந்து தலங்களும் அவற்றின் ஆலயங்களில் அவ்வப் பூதங்களின் இயற்குறிப்பும் அமைந்துள. ஆகவே, கோயில்கள் ஐம்பூதங்களின் பொது வமைப்பாலும், சிறப்பானும் பாசத்தை யறிவுறுத்துகின்றன.

உடம்பு ஒன்றுகலின் ஒரே சுற்று மதிலையுடைய கோயில்களும்; இப்புலப்படு முடலோடு கன்மேந்திரிய ஞானேந்திரிய பிராணாதி மனங்களின் கூட்டமாய புலப்படாத தென்னுஞ் சூக்குும வுடம்பும், உலகப் பற்றுக்குக் காரணமான அவிச்சையாங் காரண வுடம்பும் ஆய மூவுடல்களின் குறியாக மூன்று சுற்றுமதில்களையுடைய கோயில்களும்; உண்டியாலான வூனுடல், உயிர்ப்பென்னும் பிராணன் முதலிய வாயுக்கள், மனம், புத்தி, சுகமான வுறக்கத்தில் ஒன்று மறியாத்தன்மையாய அஞ்ஞான மென்னும் அவிச்சையாகிய அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆநந்தமய கோசங்களென்னுந் தூல சூக்கும காரண வுடல்களாறு ஐந்து புரைகளின் குறிப்பாய ஐந்து பிரகாரமென்னுஞ் சுற்றுச் சுவர்களை

யுடைய கோயில்களும்; தூல வுடம்பு: தோல், இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, நரம்பு, மூளை யென்னும் ஏழு பொருள்களா லாக்கப்பெற்றதால் ஏழு மதில்களையுடைய கோயில்களு மாக ஆலயவமைப் புள்ளது. உடலின் மேற்கீழாகப் பல வீணைப் பெலும்புத் தொடராலாய முதுகெலும்பின் குறிப்பே கோயில்களின் உண்முற்றத்தே பல கண்டங்களாகக் கட்டுக்களையுடைய கொடிக்கம்பமாந் துவசத் தம்பம் நாட்டப்பட் டிருக்கிறது.

மெய், வாய், கண், மூக்கு, செவிவாயிலாக உணர்ச்சி நரம்புகளால் தலையின்க ணுள்ள மூளையின்பால் ஐயுணர் வுண்டாகின்றது. அதுவும், மனம் பொறிவழி கூடிய போதாகிறது. ஐம்பொறி மனங்கள் உலகத்தைத் தலையினிடத்தே யுணரும். தலையினிடத்தேயுள்ள மூளை யென்னுந் தாதுவை யடுத்தவிடத்தேதான் மனந்தன் பெயரின் பொருளாகிய நினைத்தலையுறும். அம்மனமே மூலத்தானமாகும். மனம், உள்ளம், சித்தம், நெஞ்சம், புத்தி, சிந்தை யென்பன ஒரு பொருட்சொற்கள்.

உலகப் பொருள்களாய நிலம், நீர், தீ, வளி, வானென்னும் ஐம்பெரும்பொருட் பரப்புக்களைப் பாசமென்பர். இப்பாசப்பொருள் கடவுட்பொருளை முதற்காரணமாக வுடையது. முதற்காரணமாவது: எதன் கண் ஒன்றித்துக் காரியந்தோன்றுமோ அது முதற்காரணம்; காரியமாகமாறி யதினின்றும் வேறுபடாதிருக்கத்தக்கது; செயப்படுபொருளோடு பிரிவுறாததாய வொற்றுமை யினையுடையதாய்த் தானே செயப்படு பொருளாவதாயிருப்பது. வெறும் பொன்னாலேயே செய்யப்பட்ட அணி

யாங்காரியப் பாட்டில் அணிக்கு வேருகாமல் ஒற்றுமைச் சம்பந்தமுடையதாயிருக்கும் பொன், அணியாகிய காரியமாஞ் செயப்படு பொருளுக்கு முதற் காரணமாக வறியத் தக்கது. இன்னணமே ஆடையாகிய செயப்படுபொருளாங் காரியத்துக்கு முதற் காரணமாக நூலுள்ளது. கடமுதலிய மட்பாத்திர காரியங்களுக்கு முதற்காரணம் மண்ணுக வமையும்.

பாசப் பொருளான ஐம்பூத வுலகத்துக்கு முதற் காரணங் கடவுளே. ஆகவே, ஐம்பூத வுலகப்பொருளுக்குப் பதியாகிய பழம் பொருளாஞ்சிவம் முதற்காரணமாக வுள்ளது.

சுந்தரமூர்த்தி

'நிலனே நீர்வளி தீநெடு வானக மாகிநின்ற புலனே'

'மண்ணீர் தீவெளி கால்வரு பூதங்க ளாகி மற்றும்
பெண்ணேு டாணலியாய்ப் பிறவாவுரு வானவனே.'

திருஞானசம்பந்தர்

'புவிமுத லைம்பூத மாய்' 'வருபூதம் மவை யைந்தாய்'

திருநாவுக்கரசர்

'தானலா துலக மில்லை'

'இருசுடர்க ளிரண்டு மொன்றும் விண்ணெடுமண்
ணுகாச மாயினனை'

'இருநிலனய்த் தீயாகி நீருமாகி யியமானனு யெரியுங்
காற்றுமாகி'

'அருநிலைய திங்களாய் ஞாயிறுகி யாகாசமா யட்ட
மூர்த்தியாகி'

**மாணிக்கவாசகர்**

'மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து'
'வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி'
'நிலந்தவா காய நீர்நிலந் தீகாலாய்'

**காரைக்காலம்மையார்**

'அவனே யிருசுடர் தீயா காய மாவான்
அவனே புவிபுனல் காற்றாவான்'

அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
அறிவா யறிகின்றான் றானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே யவன்

**திருக்களிற்றுப்படியார்**

அவனே யவனிமுத லாயி னானும்
அவனே யறிவாய் நின்றானும்—அவனேகாண்
ஆணாகிப் பெண்ணா யலியாகி நின்றானுங்
காணாமை நின்றானுங் கண்டு

**திருக்குறள்**

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

எழுத்துக்கள் அங்காத்தலை (வாய்திறத்தலை) முதற் காரணமாக வுடைமைபோல உலகம் முதல்வனை முதற் காரணமாக வுடையது.

ஔவை குறள்

வாயுவாய் மன்னுயிராய் மற்றவற்றி னுட்பொருளாய்
ஆயுமிடந் தானே சிவம்.

கிரீஸென்னு மேனாட்டுத் தத்துவ ஆராய்ச்சி யாளர்

எம்பிடாக்லீஸ், ஆனெக்ஸகோரஸ்

'அழிவில்லாத பரம்பொருளில் ஆற்றல்களாய சத்தி களுண்டு. அவ்வாற்றல்கள் பற்பல விதமாக ஒன்று கூடக்கூடும். அப்போது பல்வேறு புதிய பொருள்களுளவாகும். அவ்வாற்றல்கள் பிரிதலை யுறக்கூடும். அப்போது உண்டான புதிய பொருள்கள் தம்பேரையும் வடிவத்தை யுமிழக்கும் (அழிவுறும்). அச்சத்திகளின் கூட்டமே ஆக்கனும் பிரிவே அழிவுமாக விளையும்.'

இவற்றால் உலகப் பொருள்களாய ஐம்பூதங்கள் கடவுட்பொருளேயாமென்பது பெறப்படும்.

திருஞான சம்பந்தர்

'வருபூதம் மவையைந்தாய் எட்டுத்திசை தானாய் வேறாய்'

மாணிக்கவாசகர்

'நிரந்தவா காய நீர்நிலந் தீ காலா யவையல்லையாய்'

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிது மற்றின்மை

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

கிரீஸென்னு மேனாட்டுத் தத்துவ ஆராய்ச்சி யாளர்
மெலீஸஸ்

'உள் பொருளாய சத்தென்னும் பரம்பொருளுக்குத் தோற்றத்தைக் கூறவொண்ணாது. அன்றியும், சத்துப்பொருள் ஒன்றாகத் தானிருக்கவேண்டும். பலவுள வென்றால் சத்து கண்டப்படும். சத்துப்பொருளிலோ பிறிதுக்கு இடமிருத்தற்கில்லை. ஆகையால், இயக்கம் ஒரு பொருள் ஓரிடத்திருந்து நிகழுமாறில்லை. அவ்வாறு பொருட்பன்மையும் இயக்கமு மில்லாதபோது பிரிவுமில்லை; கூட்டமுமில்லை. அஃதாவது, மாறுதலை யில்லை. ஆகவே, உலகில் பொருள்கள் இயங்குவதும் மாறுவதுமாய் நாம் காணும்போது நமது புலன்கள் நம்மை யேமாற்றுகின்றன வென்றே கொள்ளவேண்டும்.'

கிரீஸென்னு மேனாட்டுத் தத்துவ ஆராய்ச்சி யாளர்
பார்மினடீஸ்

'சத்திலிருந்து ஒரு பொருள் தோன்றியதென்றால் அஃது அதனிடத்திருந்தே வந்ததென்றுதானே கொள்ள வேண்டும். இப்படிப் பொருத்துக்கொண்டால் திரிபு என்பது பொய்யென்றுதான் ஏற்படும். அஃதாவது, ஒரு பொருள் மற்றொன்றாய் மாறுவதில்லை. உள்பொருள் (சத்து)

எப்போதும் உள்பொருளே. ஆகவே நிலையானதும், ஒன்றின் பற்றுக்கோடற்றதும், திரிபற்றதுமாய பொருளொன்றே மெய்ப்பொருள். அஃது ஒன்றாயும், கலக்கமற்றதாயு முள்ளது. அன்றியும் எண்ணத்திற்கெட்டாத பொருளிருக்க முடியாது. இருக்கமுடியாததைப் பற்றியெண்ணவுமுடியாது. ஆகையால் எண்ணமும் இருப்புமொன்றே.'

'மெய்ப்பொருள் நிலைப்பேறுடையதா, யொரேபடித்தானதாய், ஒன்றாய், வரையறுத்துப் பேசவொண்ணாததாய், மாறா வியல்பினதாய், அறிவானதா யிருக்கும்.'

'எல்லா மாறுதல்களும் எண்ணத்திற்கெட்டாதவையாதலின் இல்பொருளே. புலன்கள் வாயிலாய் நாமுணருமுலகம் பொய்யே.'

கிரீஸென்னு மேனாட்டுத் தத்துவ ஆராய்ச்சி யாளர்

ஹிராக்லிடஸ்

'ஐம்புல வுணர்வு அறிவிற்குத் தாழ்ந்ததே. அப்புலவறிவு நம்பத்தக்கதன்று. அகக்கரணங்களாலும் அறிவாலும் ஆராய்ந்த பின்னரே யுண்மை விளங்கும்.'

ஔவைகுறள்

பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு

எப்பொருள் எப்படிப் பட்டதாயினும் அப்பொருளை யப்படியே கண்டு நிச்சயிப்பது அறிவுடைமை

யாகா தாதலின் உலகமாகக் காணப்படுகிற பாசத்தைக் கண்டாங்கு உள்பொருளாக நிச்சயிப்பது ஆய்வறிவுடைமை யன்று.

கோயிலின் மூல (முதற் காரண)ப் பொருள் காணப் பெறும்போது கோயில் கடக்கப் பெறுவதாகும். ஆகவே முதற்காரணமாய மூலப்பொருளை யறிதற்கு உடம்பு ஆலயமாகக் குறிக்கப் பட்டுளது. பாசமாம் உடம்பின் மூலப்பொருள் ஆய்ந்தறியப்பட்டால் உடம்பு முதலிய உலகப் பொருளாம் பாசம் நிலையற் றொழியும்.

திருநாவுக்கரசர்

**'காயமே கோயிலாக'**

திருமூலர்

**உள்ளம்பெருங் கோயிலா னூனுடம் பாலயம்**
வள்ளற்பிரா னார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத்தெளிந் தார்க்கு சீவன்சிவ லிங்கம்
**கள்ளப்புல னைந்துங்** காளாமணி விளக்கே

இவற்றால் உடம்பு ஆலயமும், உள்ளம் மூலத்தானமுமாம் என்பது பெறப்படும். 'கள்ளப்புலனைந்தும்' என்றமை கிரேக்க தத்துவ ஆராய்ச்சியாளர் புலன்களைப் பற்றிக் கூறிய 'நம்புலன்களே நம்மை யேமாற்றுகின்றன' வென்பதையும், 'புலன்கள் வாயிலாய் நாமுணரு முலகம் பொய்யேயாம்' என்னுங்கருத்தையும் குறிக்கும் கள்ளப் புலன் என வருவதிருக்கக் கருதுமென வறியவுளது.

## நந்திக் குறிப்பு

உடம்பையும் பொறிகளையுங் கொண்டு வினைபுரிந்து அதனால் வரும் இன்ப துன்பங்களை நுகர்ந்து வருவதாய தூலமனம் நல்வினைகளால் தூய்மைப்படுவது முதல் அறிவு நூல்களால் தெளிவையும் அமைதியையும் உறுகின்றவரையிற் படிப்படியாய் சூக்குமப் பட்டு வரும். இதன் குறிப்பாக சிவாலயங்களில் கோபுரவாசன் முதல் மூலத்தானம் வரை பெரியது முதல் சிறியதாக அளவில் குறைந்து குறைந்து வருவனவாக நந்திகள் உள்ளன. மனமே பசுவாகும். பசுவாம் மனத்தின் குறிப்பே நந்தியாகும்.

அறிவாராய்ச்சியை மனம் அடைந்தபோது மிக்கத் தூய்மை யுறுவதால் அது சிவவிளக்க முண்டாகிற விடமாயமைகின்றது. அங்ஙனம், சிவம் விளங்குகிற மனமாமிடத்தின் குறிப்பாகக் கோயிலில் சிவக்குறி யிருக்கு மிடமாய மூலத்தான முள்ளது. சிவம் மூலமென்றும் வழங்கப் பெறும். பெரியபுராணம்: 'மூல முதல்வர்' மூலப் பொருளுக்குத் தானமே மூலத்தானமாகும்.

### சுந்தரமூர்த்தி

'மாயமாய மனங்கெடுப் பானை மனத்துளே மதியா
யிருப்பானை'

'ஊனமில்லா வடியார்தம் மனத்தேயுற ஞானமூர்த்தி'

### திருநாவுக்கரசர்

'சிந்தையார் சிந்தையுளார்'

'உற்றன வுற்றவர் தம்மை யொழிந்துள்ளத் துள்பொருள்'

'அந்தணர்தஞ் சிந்தை யானை'
'புந்திக்குவிளக்காய புராணனை'
'பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுண் மெய்யனை'
'சமாதி செய்வார் தங்கள் புந்தியானை'
'என் னெஞ்சத்துள்ளவர்'
'நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்புறு மமுதாயவன்'

'சிந்தையுட் சிவமாய் நின்ற செம்மை போதி
புந்தியாய்ப் புகுந்துள்ள நிறைந்தவெம் எந்தை'

மாணிக்கவாசகர்

'சிவனவ னென்சிந்தையு ணின்ற வதனால்'
'என்மனத்துள்ளே யெழுகின்ற சோதியே'

திருஞானசம்பந்தர்

'சித்தத்தெழுந்த செழுங்கமலத் தன்ன சேவடிகள்'

ஔவை குறள்

தனக்கோ ருருவில்லை தானெங்கு மாகி
மனத்தக மாய்நிற்கு மது

தாயுமானூர்

'சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே'

என்பவற்றால் அறிவாயசிவம் எழுந்தருளுவது மனத்தின்மேல் என்னப்பெறப்பட்டது. மனத்திற்கு அயர்வு, அலைவு, அமைவு என்னுந் தாமத, இராசத, சாத்வீகத் தன்மைகளுளவாம். தூய்மைப்பட்ட மனம் அமைதியாய சாத்வீகத்தைப் படையினும், அப்போது மனமாகும்

முயல்வு அயர்வாந் தன்மைகள் சுத்தமுள்ளனவாக விருக்கும். இவை சாத்வீகத்தில் இராசதம், சாத்வீகத்தில் தாமதம் எனப்படும். இவ்விரு நிலைகளும் இன்றியதே சாத்வீகத்தில் சாத்வீகமாம். சாத்வீகத்தில் இராசதத் தாமதத் தன்மைகளும் தூயனவாதலின் அந்நிலைகளை யுடைய மனத்தே அறிவாஞ் சிவத்தின் இருத்தலாந்தன் மையுணரப்படும். இவற்றின் குறிப்பாக மூலத்தானத்தில் சுயம்பின் கீழ்ப்பாகமாக மேல்வட்டங் கீழ்வட்டங்களாய விஷ்ணு பிரமபீடங்கள் என்பன அமைக்கப்பட்டுள.

ஔவை குறள்

உள்ளமே பீட முணர்வே சிவலிங்கந்
தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு

திருமூலர்

'சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளிய வல்லார் கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே'

மனத்தின்மேல் சிவம் விளங்குவதின் குறிப்பே இருபீட வமைப்பின்மேல் சுயம்பாந் தாணுவடிவம் அமைந்துள்ளது.

சுத்தசாத்வீகத் தன்மையதாக மனமாகின் அது சிவத்தை யறிந்து அஃதோடு ஒன்றுபடும்.

திருநாவுக்கரசர்

'மனமணி யிலிங்க மாக'

திருமூலர்

'சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை'

**ஔவை குறள்**

சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித் திருக்குஞ் சிவம்

பாச மலங்களோடு உலகவாழ்வில் அலைகின்ற மனத்தை யுயிரென்று கொண்டு இடர்ப்படுவாருளர். பசு வென்று வழங்கப்படுவது இன்பதுன்பங்கட்காளாய மனத்தையாகும். மனமாய பசுவையே கோயில்களில் நந்தியாகக் குறித்துளது.

## சிவக் குறிப்பு

அகல நீட்சி, உயரந்தாழ்ச்சி முதலிய குணங்குறி யெல்லையற்ற அறிவாஞ் சிவமே பதி யெனப்படும். அப் பதியின் குறிப்பாக சுயம்பென்னுந் தாணுவடிவம் அமைக்கப்பெற்றுளது.

முன்னர் உயிரென்றும் ஜீவனென்றும் வழங்கப் பெற்றிருந்த பொருள் மனம் அமைதியுற்றபோது அறிவாங் கடவுளா யிலங்கப் பெறுவதாகும். அவ்வறிவினைக் குறித்ததாக சுயம்புக்குறி யமைப்பு உள்ளது.

**ஔவை குறள்**

சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்
பாவம் நசிக்கும் பரிந்து

**திருமூலர்**

'தெள்ளத்தெளிந் தார்க்கு சீவன்சிவ லிங்கம்'
அறிவு வடிவென் றறியாத வென்னை
அறிவு வடிவென் றருள் செய்தா னந்தி

அறிவு வடிவென் றருளா லறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே
'அறிவுக் கழிவில்லை யாக்கமு மில்லை'
'தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்'

ஔவை குறள்
'உணர்வே சிவலிங்கம்'

தாயுமானர்
தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான் சுமந்த
சித்துருவா மெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ

இவ்வாற்றால் தானென்றுஞ் சீவனென்றும் உயிரென்றும் வழங்கப்படும் பொருளை யறிவதே பெறத்தக்க பேறாயிருத்தலின் அஃதே மெய்ப்பொருள், செம்பொருள், சிவம் எனப்படும். அஃது உயிர்களின் அகத்தே அறிவாக வொளிர்வது.

திருஞான சம்பந்தர்
ஞானத்திர ளாய்நின்ற பெருமானல் லடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவு முண்மைப்பொருள் போலும்
ஏனத்திர ளோடினமான் கரடியிழிவு மிரவின்கண்
ஆனைத்திரள் வந்தணையுஞ் சாரலண்ணா மலையாரே

திருநாவுக்கரசர்
ஆதியு மறிவு மாகி யறிவினுட் செறிவு மாகிச்
சோதியுட் சுடருமாகித் தூநெறிக் கொருவ னாகிப்
பாதியிற் பெண்ணு மாகிப் பரவுவார் பாங்க னாகி
வேதியர் வாழுஞ் சேறை செந்நெறிச் செல்வ னாரே

### சுந்தரமூர்த்தி நாயனார்

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே யென்னுடைய குருவே யுன்குற்றேவல் செய்வே
னெறியேநின் றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள் [ன்
அறிவே யுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே

### மாணிக்கவாசகர்

'மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
தோற்றச்சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே'

அறிவனே யமுதே யடிநா யினேன்
அறிவனாகக் கொண்டோ வெனையாண் டது
அறிவிலாமை யன்றே கண்டதாண்ட நாள்
அறிவனோ வல்லனோ வருளீ சனே

ஊனாயுயிரா யுணர்வா யென்னுட் கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய்

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயிலே யிது கேளீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட
வள்ளல்

ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வதுவாய வொருத்
மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவாக் [தன்
கூவாய்

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
வப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருகிப்
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே
திரைபொரா மன்னு மமுதத் தெண்கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்து நின்றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோ
ஓவா துள்ளங் கலந்துணர்வா யுருக்கும் வெள்ளக் [மை
கருணையினல்
ஆவா வென்னப் பட்டன்பா யாட்பட்டீர் வந்தொருப் படு
போவோங் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடை [மின்
யான் கழல்புகவே

திருவருட்பயன்

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து
அருவு முருவு மறிஞர்க் கறிவாம்
உருவு முடையா னுளன்

வெளிமயமாய அருவமும், உலகப்பொருள்களாய உருவமும், ஞானியர்க்கு அறிவாஞ் சொரூபமு மாகவுள் ளது மெய்ப்பொருள்.

### பெரிய புராணம்

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

### திருக்குறள்

கற்றதனு லாயபய னென்கொல் வாலறிவ
னற்றாள் டொழாஅ ரெனின்

### ஔவை குறள்

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

### தாயு மானர்

ஆதியந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவடிவா னடியைப் போற்றுநா ளெந்நாளோ

---

இளஞ்சிறார்க்கு நுண்ணறிவையும் நீதி யொழுக்கத்தையும் விளைத்தற்பொருட்டுக் கதைகள், விலங்கின முதலிய ஜந்துக்களைப்பற்றிக் கூறப்படினும் இளையோர் மூத்தவராம்போது விலங்கினங்களைப்பற்றிய கதைகளைப் பொய்யெனப் புறம்போக்கி அக்கதைகளால் விளைந்த நுண்மதியையும் நல்லொழுக்கத்தையு மட்டும் கொள்வதுபோன்று அறிவு நூலுணரு மாற்ற லமைப்பெறாத மக்களின் முதற் பருவத்தில் கடவுட் சிந்தனையை விளைத்தற்பொருட்டுப் புராண வரலாறுகள் கடவுளை உருவினதாகவும் திருவிளையாடல் புரிந்ததாகவும் கூறப்படினும் வாய்த்த கடவுட் சிந்தனையால் கடவுளைப்பற்றி நன்கறிதற்காக சமய நூலுணரப்புகுந்து கடவுள் வியாபக வடிவின தென்பதைத் தெரிந்துகொண்டு ஆலய வுற்சவத்திற்குக் காரணமான புராண உருவினங்களைப் பற்றிய வரலாற்றை நிகழாத பொய்யுரைகளெனப் புறப்படுத்துவர் அறிவு நூலறிந்த நுண்ணறிவாளர்.

கிரீஸென்னு மேனுட்டுத் தத்துவ ஆராய்ச்சியாளர்
ஹிராக்லிடஸ்

'மனிதனுடைய மேலாய சிறந்த உறுப்பு அவன் உயிரே. அஃதெல்லாவற்றிலும் நிறைந்துள்ள கடவுட்டன்மை யறிவும் நீக்கமற நிறைந்த நியதியுமாம். அதனை யறிந்து அதன் வழியே தன்னைச் செலுத்தி யொழுக வேண்டும்.'

## நாகக் குறிப்பு

ஐம்பொறியுணர்வு, முதுகெலும்பினூடே செல்கின்ற உணர்ச்சி நாடியும் அதன் பல கிளை நாடிகளும் தலையினுள் உள்ள மூளையைக் கூடுவதா லுண்டாகும்.

முதுகெலும்பின் கீழ்முனை தொடங்கி மூளையீருக அவ்வெலும்பினூடே செல்கின்ற நாடி தலை யுள்ளிடத்தி

---

உயிராய தமது மெய்வடிவாகவுள்ள மெய்ப்பொருளை முன்னிலைப்படுத்தி நீ முதலிய சொற்களாலும், படர்க்கை யாக்கி யவன் முதலிய சொற்களானும் முன்னோர் ஆண்டுள்ளார். அறிவு, உணர்வு, ஞானமயம், மெய்ஞ்ஞானம், போதம், சாட்சி, சின்மயப்பொருள், சித்து, சிற்றம்பலம (சித்து + அம்பலம்), சிற்சுகம், மெய்விளக்கு, மூதறிவு, பேரறிவ, அறிவான சுகரூபசோதி, போதவூரேறு, சுத்தஞானவெளி, உள்ளுணர்வு, நுண்ணுணர்வு முதலிய வொருபொருள் குறிக்கும் பல்பெயர்களால் ஆட்சியின் பொருட்டு முன்னிலை, படர்க்கையிடத்ததாகச் செம்பொருள் வழங்கப்பட்டிருப்பது தன்மையிடப்பெயரால் பலபட விரித்து விளக்கற்குக் கூடாமையினலாகும்.

லுள்ள மூளையின் மேல் அதன் பாந்தமாய் படிந்திருக்க விருக்கும். அந்நாடி படம்விரித்த ஒரு பாம்பின் வடிவ மொத்தது. இவ்வொப்புமையாலேயே அந்நாடிக்குக் குண்டலியென்றும் அஃதறியுமாற்றலுடையதால் குண்டலி சத்தியென்றும் வழங்கப்படும்.

தாயுமானர்

சித்திரமெய்ப் புற்றகத்துக் **குண்டலிப்பாம் போன்**
**றுட்டுஞ்**
சித்தனையென் கண்ணுற் றெரிசிப்ப தெந்நாளோ

அறியாத வென்னை யறிவாய நீயென் றகம்புறமும்
பிறியா தறிவித்த பேரறிவாஞ் சுத்த பேரொளியோ
குறியாத வானந்தக் கோவோ வமுதருள் **குண்டலியோ**
சிறியேன் படுந்துயர் கண்டு கல்லாணிழற் சேர்ந்ததுவே

என் றருளியுள்ளவற்றால் விளங்கும்.

பிராணவாயுவை யுடம்புக்குள் நிறுத்து மொரு முறையால் மனம் சலனமின்றி நிற்பதுண்டு. மனம் அசைவற்றுள்ளபோது அகத்தே யொளிகளும் ஓசைகளும் உண்டாகும். அவற்றை யுணர்ந்த வெண்ணமிருப்பதால் மனம் ஒருநிலை யுறும். வாயுவைக் கும்பித்து மனம் நிற்கப்பெறாத வின்றியும், தியான முதலிய முறைகளாலும் மன மசையாது நிற்பதுமுண்டு. இம்முறையிலும் அகத்தில் பிரகாசங்களும், நாதங்களுந் தோன்றும். பிராணவாயுவை யடக்கு முறையால் வெப்பம் அகத்தே யுண்டாகிக் குண்டலி நாடியைக் கிளர்ச்சிசெய்ய அது மூளையின் மீது தலைவைத்துப் படிந்திருப்பதினின்றும் நீங்கிப்

படம்போன்ற அதன் மேனுனி சற்று மேனுயர்ந்து நிற்கப்பெறும். அக்கால் இப்பயிற்சியாளராய யோகி கட்கு ஆறுதலாய வின்ப வடைவுண்டாகும்.

குண்டலி நாடியது மேனுனியின் படம் மேனுயருங் கால் அறிவாஞ்சிவம் யோகிகட்குத் தம்வடிவாக விளங் கும். இந்நிலையே சிவமும் அதன்மீது சத்தியு மிருப்ப தென்னப் படுவது. சத்தி யென்பது தலைதூக்கிய குண் டலி யென்னு முணர்வு நாடியையேயாகும்.

---

ஐயுணர்வறியுமாற்றல் சத்தியென்று வழங்கப் பெறுவதாலும் இச்சத்தியுடையநாடியின் வடிவ வொப்புமைபற்றிப் பாம்பாகக் கூறப்படுவதாலும் உலகில் நிகழும் பிறபல சக்திகளாய ஆற்றல் களும் பாம்புவடிவினவாக மாறுகக்கருதப்பட்டுள்ளன.

அவை: துவிச்சக்கரவண்டி, பம்பரம் முதலியன சுழலும் வேகத்தால் நிற்றலைப்பெறுவதுபோல் பூமி சுழற்சிவேகத்தால் அந்தரத்தே நிலைபெற்றிருத்தலை ஆதிசேடனும் அரவமொன்று தாங்குகிற தென்பதும்;

கலைமதி, புவியாய விலைவ யொன்றையொன்று சுற்றி வரும்போது ஒன்று மற்றொன்றால் மறைபட சூரியன் சந்தி ரன் என்பவற்றின் கிரகணங்களென்னும் அவற்றின் மறைப்பு களாய ஆற்றல்களைப் பாம்புகளென்பதும்;

மாயையென்னுஞ் சத்தியைச் சித்திரத்தால் பாம்பின் வடிவாக வரைந்து குறிப்பதும்; சிவத்துக்குப் பலவாற்றல்கள் உளவாதலின் அவ்வாற்றல்களாஞ் சக்திகளையே நாகங்களாம் அணிகலன்கள் அணியப்பெற்றவ ரென்னப்படுவதுமாகும். சத்திகளையெல்லாம் பாம்பு வடிவங்களாகக் கற்பனைசெய்தது ஐயுணர்வாஞ் சக்தியுடைய குண்டலி நாடி பாம்பின் வடிவாக வுள்ளமையை முன்னிட்டே யெனப்பெறப்படும்.

சிவஞான சித்தியார்

'காட்டுகம லாசனமே லீசர்சதா சிவமுங்
கலாமூர்த்தமுமா யிவற்றின்கண் ணுகுஞ் சித்தி
வீட்டையருள் சிவன்மூர்த்தி மாணுகிச் சத்திமேலாகி
நிற்பணிந்த விளைவறிந்து போற்றே'

திருவுந்தியார்

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்தீ பற
விமலற் கிடமதென் றுந்தீ பற

'மீதானம்' என்பது ஆறுமாதாரமாய ஆக்கினை யென்னும் புருவ நடுவுக்கும் மேலாய விடமாகும்.

அறிவாராய்ச்சியால் இரேகைகள் போன்ற மடிப்புகள் அநேகத்தையடைந்த மூளையாம் ஆயிரவிதழ்க் கமலத்துக்கு மேலும் குண்டலி முடிக்குக் கீழுமான இடைப்பட்ட விடத்தே அறிவாஞ் சிவம் விளங்கும்.

தாயுமானர்

உன்ம னிகடு ளோளிர் பரஞ் *சோதியாஞ்
சின்ம யப்பொரு ளேபழஞ் செல்வமே

என்பதால், தலைக்குள் குண்டலி நாடியின் இடத்தே அறிவுமயமாம் மெய்ப்பொருள் ஒளிரு மெனவறியத் தகும்.

ஆகத்தே சிரத்தினூடே குண்டலிசத்தியென்னும் ஐயுணர்வுறு நாடி யதன் முடியை மேலுயர்த்தும் போது

---

* 'சோதி' முதலிய பிரகாசப்பெயர்கள் கடவுளைக் குறிப்பனவாகவரின் அறிவாம் விளக்கத்தையே பொருளாகக் கொள்ளல் வேண்டும். பிற ஒளி பொருள்களாகக் கொள்ளல் கூடாது.

சிவம் யோகிகட்கு விளங்கப்பெறு மென்பதன் குறிப்பாக ஆலயங்களில் சிவக்குறியின் மேலே ஐந்துதலைகளையுடைய நாகவுருவம் அமைக்கப் பட்டுள்ளது.

சைவ சமயநூற் பொருளின் குறிப்பான கோயின் முதல் நாகமீறாக வுள்ளவை வந்தன.

இனி, சமயநூல் முடிபு கூறுகின்ற நெறிநின்று பேறுபெறு மாற்றை யாய்ந்தறிவது இனிது.

## ஆண்டானடிமைத்திறம்

மனம் தன் செயல்களின் வகையால் உள்ளம், மனம் புத்தி, சித்தம், அகங்கார மெனப்படும். அவற்றுள் கடையதாகிய அகங்காரம் உடலாதிய வற்றை நானென்னப்பற்றால் வரைந்து தழைத்துக் கடினமாய் நிற்கும். நானென்னும் அகங்காரமே உடலைச்சேர்ந்த வற்றை யெனதெனத் தழுவித் தழைத்தலையுறும், ஆகவே அது கல் போல் வன்மையும் ஆல் போல் தழைத்தலையு முடைமையின் குறிப்பே கல்லால மரமெனப்படுங் கடவுள் வீற்றிருத்தற்காய தருவெனப் புராணங் கூறுவது. 'அகங்கார மென்னுங் கல்லைப் பிளந்து' என்று தாயுமானுர் அருளியது ஈண்டுணரத்தக்கது. மனத்தின் ஓர் பகுதி உடலை நானெனக் கொண்டிருத்தலாய அகங்காரத்தன்மை செழித்திருப்பினும் அவ்வகங்காரமுள்ள போதே மனம் தன் இரசோ தமோத் தன்மைகளையுடைய உள்ளம், கடி மனம், புத்தி, சித்தமென்னும் பகுதிகள் தூய்மையுற்று சாட்சியைச் சார்தற் பொருட்டு நடுவு நிலைமை, அஞ்சாமைக்குக் காரணமாய வாய்மை பொறையுடைமை, திருத்

திபாய அறம் பொரு ளின்ப வீடு பேறுகளி னியல்களை சாட்சியால் உரைப்பெறும். நல்லறி வுணர்த்துஞ் சாட்சியா மாண்டானுக்குக் கடிமனப் பகுதிகள் அடங்கிக் கிடக்கப்பெறு மடிமைகளாம் நால்வராக வமையும். இதன் குறிப்பே தட்சிணாமூர்த்தமும் முனிவர் நால்வருமாகும்.

திருநாவுக்கரசர்

'கடிமனம் அடிமையாக'

தாயுமானர்

சிந்தையவிழ்ந் தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே யின்பநிலை வாய்க்கும் பராபரமே

இவற்றால் கடிமனம் சிந்தைப் பகுதிகள் அடங்கிக் கழியத் தக்கவை யெனப் பெறப்படும்.

தத்துவ ஆராய்ச்சியாளர் கிரேக்கர் டெமாக்ரிடஸ்

இன்பமே உயிர்வாழ்க்கையின் குறிக்கோள். சாந்தம், சமநிலை, அஞ்சாமை யென்னுந் தகைமைகளின் குறைகள் முதிர்ந்தவழி ஆன்மாவிலிருந்து பெருகு மொரு திருப்திநிலை தான் இன்பத்தின் சொரூபம். இந்நிலை செல்வத்தாலாவது உடல் வாயிலாக நுகரப்படுகின்ற எவ்வித உலக இன்பத்தாலாவது வாய்ப்பதொன் றன்று. ஐம்பொறிகளை யடக்கி யாண்டு நேர்பட வொழுகினல் மட்டுஞ் சித்திக்கும்.'

திருநாவுக்கரசர்

'வாய்மையே தூய்மையாக மனமணியிலிங்கமாக'

**தாயுமானர்**

முத்தே பவளமே மொய்த்த பசும் பொற் சுடரே
சித்தே யென்னுள்ளத் தேளிவே பராபரமே

இவ்வாற்றால் சான்றோ ஆண்டானை, கடிமனப்பகுதிகள் அடிமையவாய் நடுவு நிலைமை வாய்மை பொறையுடைமைகளையும் திருப்தியையும் பற்றியொழுக மனமறியும். இங்ஙனம் மனத்துக்கு உணர்த்துவது சான்றோ யாகவுளது.

## சிவஞானம்

ஆண்டானுஞ் சான்று அடிமையா மனத்துக்கு நடுவு நிலைமை வாய்மை பொறையுடைமையாம் அறமுதலிய மூன்றையருளியதால் மனம் தெளிவுந் தூய்மையுமுற்று அறிவை யொன்றி யின்ப மேவற்குரிய ஞான நெறியை யாய்ந்துணரத் தூயமன முற்படும். அறிவாஞ் சிவத்தை யறிதலாம் சிவஞானப்பேறு சின்முத்திரை யென்னு ஞானக்குறிப்பால் விளக்கமுறும்.

சித் + முத்திரை = சின்முத்திரை = அறிவுக்குறி ஞானக்குறி யெனப் பெறப்படும். அம்முத்திரை ஆண்டான் தன் வலக்கரத்தின் கடைமூன்று விரல்களின் விரிப்பு தள்ளத் தக்கவை மூன்று என்றும், முதலிருவிரல்களின் கூடுதல் கொள்ளத்தக்கவை யிரண்டென்றுங் குறிக்கும் புராணம்.

ஒன்றையறியுஞ் செயல் மூவகையாலாகும். அவை அறிவான், அறிபொருள், அறிவு என்பனவாம். அறியும் வினை முதல், அறிபடுபொருள், அப்பொருளறிவு என

வெண்தையும் அறியுங்கால் நிகழும். இம்மூவகைப் பெயர்களையே காண்பான், காணப்படுபொருள், காட்சியென்றும் தெரிவான், தெரிபொருள், தரிசனமென்றும்; ஞாதுரு ஞேயம், ஞானமென்றும் வழங்குவர். முன்னிலைப் பொருளை முன்னிட்டுத் தான் அறிவானெனவாதலையும், எதிரிற்காணும் அவ்வறிபடு பொருளையும், அதனை யறிந்த அறிவாய விஷய ஞானத்தையும்விட்டால் அறிவாஞ் சிவத்தையறியக்கூடும். ஆகவே அன்னியமாகத் தோற்றுவதை யறிதற்காக விளையும் ஞாதுரு ஞேய ஞானமாந் தன்மைகள் விலக்கற் குரியன வென்பது கடையொரு மூன்று விரல்களின் விரிப்பைக் குறிப்பதெனப் பெறப்படும்.

**சிவஞான சித்தியார்**

சன்மார்க்கஞ் சகல கலை புராணவேத சாத்திரங்கள்
சமயங்கடாம் பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள் யாவுங் கீழாக மேலாம்
பதிபசுபாசந் தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான ஞேயமோடு
ஞாதிருவு நாடாவண்ணம்
பின்மார்க்க சிவனுடனும் பெற்றிஞானப்
பெருமையுடையோர் சிவனைப் பெறுவர் காணே

**பட்டினத்தார்**

களவிறந்து கொலையிறந்துகாண்பனவுங் காட்சியும்போய்
அளவிறந்து நின்றதிலே யன்புற்றாய் நெஞ்சமே

**தாயுமானார்**

தானான தன்மயமே யல்லாலொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட்டாங்கே

போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வேறின்றாய்
ஞான காரத்தினொடு ஞேயமற்ற ஞாதுருவு
நழுவாம னழுவி நிற்கும்
ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வர்
அதுவான லதுவாவ ரதுவே சொல்லும்

என்னுமவற்றால் ஞாதுரு ஞேய ஞானமாம் காண்பான் காணப்படு பொருள் காட்சி யென்பவை யன்னிய பொருள் தோற்றங்களை முன்னிட்டு எழுதலிலாது ஒழித்தற்பால வெனப் பெறப்பட்டது.

மனம் காண்பான் காணப்படுபொருள் காட்சியாம் உலகஞானத்தை யடைவதினின்றுந் தவிர்தலைப் பெற்று சாட்சியாய் நின்று உணர்த்து மறிவை விஷயமாக அறிதலைப் பெறவேண்டும்.

தாயுமானர்

அறிவை யறிவதுவே யாகும் பொருளென்று
உறுதிசொன்ன வுண்மையினை யோருநாளெந்நாளோ

சின் முத்திரையாம் ஞானக்குறிப்பு அறிவையறிதலையும் அதற்கு வேறாயதை யறியா தொழித்தலையும் உணர்த்துதலாயிற்று.

இக்நெறியே ஞானமாகும். இக்நெறியில் நிற்பதாலேயே மனத்தையடுத்த மலங்கள்முதலியன கழிவனவாகும்.

அறிவானை யறிவென்று ஆன்றோர் வழங்குமாறறிந்து இடங்கண்டு உறுபொருளைக் கொள்ளுவது இடர்ப்பாட்டி லிழியாமையாகும்.

வேண்டா விருப்பும் வெறுப்பும்—அந்த
வில்லங்கத்தாலே விளையுஞ் சனனம்
ஆண்டானுரைத்தபடியே—சற்றும்
அசையா திருந்து கொள்ளறிவாகி நெஞ்சே

ஆண்டானும் ஞானகுரு அருளியதாகக் கூறப்பட்டதாவது: மனஞ்சலித்தலின்றி (நினைவின்றி) அறிவின்மயமாய் நிற்கும் நெறியாகும். எனவே, மனம் அறிவை நாடி நிற்றலைப்பெறவேண்டு மென்பதாயிற்று.

வேத முதலாய் விளங்குஞ் சிவவடிவாம்
போதநிலையிற்பொருந்தாம—லேதமிகு
மோகாதி யல்லலிலே மூழ்கினையே நெஞ்சேயித்
தேகாதி மெய்யோ தெளி

ஏறு மயிர்ப்பால முணர்விந்த விடயங்க ளொருப்
பாறெனவு நன்றறிந்தேன் பராபரமே

பாராதிபூத நீயல்லை—புன்னிப்
பாரிந்திரியங் கரணநீ யல்லை
ஆரா யுணர்வுநீ யென்றான்—ஐயன்
அன்பாக வுரைத்தசொ லானந்தந் தோழி

ஐம்பூதங்களாலாய உலகமும் உடம்புமாய விஷயங்களில் மோகமுண்டாகி அவ்விஷயங்களாம் நெருப்பாற்றால் தகிக்கப்படும் உயிர்கள் தாம் உலகப்பொருள்களில் ஆசையும் வெறுப்பும் அவற்றால் துன்பமாம் அல்லல் வாழ்க்கையையும் பிறப்பிறப்புக்களாம் தளையையும் வருந்துதலையும் விட்டு இன்பக் கரையிலிறங்குவதற்கு இணையற்ற

பாலம்போல் சுகப்பேறுனது அறிவே. அவ்வறிவுவடிவமே உயிர்களின் உண்மை வடிவம். ஆய்ந்தறிகின்றது எவ்வறிவோ அஃதே உயிர்களின் உண்மை வடிவாயிருப்பதென உணரப்படவேண்டியிருப்பதால் அந்நெறியையே முன்னைய அநுபவாசிரியர்கள் அநுக்கிரகித் திருப்பது உணரத்தக்கது ; கடைப்பற்றற்குரியது.

### அருணகிரி நாதர்

‘ ........................சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
உணர்வு விழிகோடு நியதி தமதூடு நாடுவதும் ’

பிற பொருள்களின் மய மாகாமல் உணர்வாம் விழியால் ஒரே படித்தாய மெய்யறிவாம் நியதியை நாடுவதே சிவ விளக்கத்தைப் பெறுதற்குரிய சாதனமாம் என்பதும் மேற்பொருளதே யாதலின் ஆன்றோர் அருண்மொழியுபதேசங்களை பொருங்காய்ந்து அந்நெறியினிற்றலே அறிவுடைய மக்கட் பிறப்பின் பயன்.

### திருவுந்தியார்

ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ் சிவ முந்தீ பற
தேடு மிடமதென் றுந்தீ பற

மனம் ஐம்புலனெறியே உலகப் பொருள்களில் பாய்தல் தவிர்ந்துள்ளபோது நிலைபெற்ற அறிவாம் மெய்ப்பொருளை மனம்நாடி முன்னிலை யாகாது தானாயதான விடமே சிவம். முன்னிலையிடத்தான் அறிபடு பொருளாகாது தேடுவதென் இடமேயான தன்மைப் பொருளாகவுள்ளது.

அவிழ விருக்கு மறிவுட னின்றவர்க்
கவிழுமிவ் வல்லலென் றுந்தீ பற
அன்றி யவிழாதென் றுந்தீ பற

மனத்தில் சாந்தமேவ இருந்து விளங்குகின்ற அறிவா மெய்ப்பொருளையே நாட்டமாகக் கொண்டு நின்ற உயிர் களுக்குத் தளையாயிருந்த உலகபாசபந்தத் துன்பங்க ளொழியும்.

**திருக்களிற்றுப்படியார்**

ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டன்று நின்றவிடஞ் சிவமாம்—நாட்டுற்று
நாடும் பொருளனைத்து நானு விதமாகத்
தேடுமிட மன்று சிவம்

சலனமின்றி சாட்சியாய் நிற்கின்ற உணர்வாம் நிலை யில் நின்று தனக்குவேறாகத் தேடுவதின்றி, தானேயாக நின்ற உணர்வாம் பதியே சிவம். நானுமுன்னிலைகளன்று.

**தாயுமானர்**

ஆக்கி யளித்துத் துடைக்குந்—தொழில்
அத்தனைவைத்து மெள்ளத்தனையேனுந்
தாக்கறநிற்குஞ் சமர்த்தன்—உள்ள
சாட்சியைச் சிந்திக்கத்தக்கது தோழி

'சாட்சியைச் சிந்திக்கத்தக்கது'. என்பது மனவமைதி யுற்றபோது எதையுமறியச் சித்தமாயும், எவற்றை யுஞ் சாட்சியாக விருந்து செயலற் றறிவதாயும் உணரப் படுமொன்றே யுண்மைப் பொருளாதலின் அச்சாட்சியை யுணர்வதே முழுமுதலை யறிவது.

மனம் அறிவை யிடையீடின்றி நாடுவதால் சுகப் பேறும் மனத்தின் அமைதியும் விளையும்.

திருக்குறள்

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

பிறப்பு நீங்க அறிவாம் உண்மைப்பொருளை யாய்ந்து மனம் அதை உணர்தல்வேண்டும்.

பத்திரகிரியார்

அமையாமன தமைய மானந்த வீடுகண்டால்
இமையாம னோக்கி யிருப்பதினி யெக்காலம்

இடைவெளியாம் விட்டுவிட்டு மனம் அறிவை யறிதலைச் செய்வது சிறந்ததன்று. மற்று, விடாது நாடிய வண்ணமா யிருத்தலாய இமையாமல் நோக்குதலைச் செய்யவேண்டுமெனப் பெறப்பட்டது.

பட்டினத்தார்

பாராமற் பதையாமற் பருகாமல் யாதொன்றும்
ஓரா துணர்வுடனே யொன்றினையே நெஞ்சமே

மேற்கூறியாங்கு ஐம்புலக் காட்சியுறாமலும்; தனக்கு நேராகக் காணப்படுகின்ற ஒளியோசைகள், பாழாம் வெறுஞ் சூன்ய முதலிய முன்னிலையிற் காண்பவற்றைப் பாராமலும்; நினைத்தலையுறாமலும்; உள்ளத்தே எப்பிற வெதையும் வாங்காமலும் அன்னிய வெதையும் அறியாமலு மிருந்து உணர்வை நாடியவண்ண மிருக்கப்பெற்ற

வதனால் மனம் அறிவெனு மெய்ப்பொருளின் தகைமை யைப்பெற்று ஒன்ருயிணைந்ததாகக் கூறும் அநுபவ அருண்மொழியால் சிவஞான நெறி யிஃதே யென வையம் மறத் தெளிந்து அறிவுறுதல் அறமிகுந்த அறிவாளர் செயல்.

சிவஞானவியலால் சின்முத்திரையின் பொருளுங் குறிப்பு மிதுவாக, முத்திரைக் குறிப்பில் மூவிரல்கள் நீட்டிக்காட்டப்படுவதற்கு மூன்று மலங்களை யொழித்தற் பொருளதாக சின்முத்திரைக்கு மலப்பொருள் கூறும் மலையார் மலம்படுசூழிபாம் பிறவிக் கடனின்று நீந்து தலைப் பெறுவது எப்பிறவியிலாம் !

இருவிரல்கள் கூடுதலாவது : அறிவானும் அறிபொருளும் வேறுவேருகவிராது ஒன்றேயாகவேனும், அறிபடுபொருளும் அறிவும் பிரிவுடையவாகாது ஒரே பொருளாகவேனும் இருத்தலை யறியவேண்டும். இங்ஙனம் ஞாதுருவும் ஞேயமும் அல்லது தெரிபொருளுந் தரிசனமும் ஒரே பொருளாக வமையுமாறு பொருந்துவது அயற் பொருளை யறிவதால் இயல்வதன்ருகும். முன்னிலையாக எதிரிற் காணும் ஒன்றை யறியுங்கால் அதுவேறு அறிபவன் வேருகவே யமையுமன்றி யொன்ருக விருப்பதின்று. அறிவானே அறிபடுபொருளாக அறியப்படின் அறிவானு மறிபொருளும் வேறின்றி யொன்ருயமையும். அஃதே அவை கூடியதாகும்.

இங்ஙனமே, தெரிபொருளென்னும் அறிபடுபொருளும், தரிசனமென்னும் அறிவும் ஒன்ருகக்கூடுதலாவது

தெரிபொருள் தெரிவானினும் வேறிலாது தெரிவானே தெரிபொருளாகத் தெரிவானால் தரிசிக்கப்பட்டால் தெரிபொருளுந் தரிசனமா மிரண்டும் ஒன்றுயமைந்ததாகும். அறிவான் அறிபடுபொருளாக அறிவானு லறியப்படின் அவ்வறிபடு பொருளி னறிவும் அறிபடுபொருளும் ஒரே பொருளாகும். ஆகவே, தெரிபொருளுந் தரிசனமுங் கூடியதாமென்பர்.

அறிவானும் அறிபொருளுங் கூடுவது அல்லது அறிபடுபொருளும் அறிவு மொன்றுவது முதலிரு விரல்களின் கூடுதலைக் குறிக்கும்.

'அறிவானு மறிபொருளுங் கூடியகூட் டரவினெழு
மறிவா னந்தம்
பிறியாத வான்மதத்துவத் தெழுந்ததா மதனைப்
பேணல் செய்வாம்'

தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும்போதிற்
சேர்ந்தசுக வறிவுமிகச் சிறந்ததாகும்
தெரிபொருளால் வளைப்புண்டாற் பந்தமாகுந்
தெரிபொருளை விட்டகன்றாற் றிடங்கொள் வீடாம்
தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும்போதிற்
சேர்ந்த வனுபூதி யிடர்தீர்ந்த தாகும்
தெரிவுற வாங்கதுபற்றி நிற்பாய் நீ நின்
றிறநிலையாஞ் சுழுத்திதனைச் சேரு வாயே

தெரிபொரு டரிச னஞ்சேர் கூட்டத்திற் சேர்ந்த வின்பம்
விரிபர மார்த்த மாகு மதற்குமே லினிவே றில்லைப்
புரிதரு பிரம நோக்கா மதனினுற் பொன்றுஞ் சித்தம்
வரிசையாஞ் சித்த நாசம் வஞ்சமி லின்பந் தானே

தெரிபொருளுந் தரிசனமும் ஒன்றாய்ச் சேரப்பெறு வதாய தானே தன்னைத் தரிசித்தல் செய்வதால் அஃது அகண்ட பரம்பொருளான நிலையாகும். அதனினும் மேம் பட்டதொன்றின்று. அதுவே சிவக்காட்சியாகும். அந் நிலையி னிற்பதால் கடிமனமழியும். மனத்தின் நினைவு நாச முண்டாயவிடத்தே பேரின்பந் தடையின்றி யுண்டாகும்.

அறிவானு மறிபடுபொருளுங் கூடப்பெறுவதாய அறிவே (அறிவானே) அறிபடு பொருளாமாறு அது தன் னையேதான் அறிவதால் அவ்விரண்டும் வேறாகவிலாமையி னால் ஞானந்தப்பேறு விளையும். அந்நிலைக்கு நனவிற் சுழுப்தியென்றும் பெயர். அஃதே துரியமாம்.

அறிபடுபொருளும் அதை யறிந்ததன் ஞானமும் கூடப்பெறுவதாய அறிபடு பொருளின் அறிவு அறிவா னே அறிபடுபொருளாக அறியப்படுவதால் வேறிலா மையின் இன்பப்பேறாகும். இவ்வின்பமே சீரியது.

மேற்செய்யுளின்கண் 'தெரிபொருளால்', 'தெரி பொருளை' யெனவந்துள்ளவை தெரிவானுக்கு வேறாய உலகப்பொருள்களைக் குறிப்பன. அதற்கு முந்திய செய்யு ளில் 'அறிவானந்தம் ஆன்மதத்துவத்தில் எழுந்ததாம்' என்பதோடு கிரேக்கர் டெமாக்ரிடஸ் என்னுந் தத்துவா ராய்ச்சியாளர் 'இன்பமே யுயிர்வாழ்க்கையின் அறிகுறி. ஆன்மாவினுள்ளிருந்துபெருகு மொருதிருப்தி நிலைதான் இன்பத்தின் வடிவம்' எனக்கூறிய ஆய்வுரையை பொப் பிட்டுணரின் உண்மை யின்பம் வெளிப்படையாகும்.

அறிவாஞ்சிவம் அறியப்படுதலால் அல்லலழிவும் ஆநந்தவடைவும் ஆகுமென வறியற்பாலன.

## மும்மல நீக்கம்

அறிவாஞ்சிவத்தை யறிந்து செறிதலாய ஞானத்தால் மனத்தைப்பற்றிய ஆணவாதி மலங்கள் மூன்று மொழியும். மலநீக்கமாய விடத்துச் செம்பொருளாம் போதம் தெற்றென விளங்கும்.

### திருமூலர்

கற்பன கற்று கலைமன்னு மெய்யோக
முற்பத ஞான முறை முறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே

### தாயுமானுர்

நீதணையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட
சோதியுட னொன்றித் துரிசறுவ தெந்நாளோ

பொய்யகல மெய்யான போதநிலை கண்டோர்க்கோர்
ஐயமிலை யையமிலை யையா பராபரமே

மூலவிருள் கால்வாங்க மூதறிவு தோன்றவருட்
கோலம் வெளியாகவெந்தை கூடுவித்த லாகாதோ

### திருமூலர்

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்

கருமெனு ஞானத்தாற் றன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே

கருட னுருவங் கருது மளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே

விண்ணின் றிழிந்து வினைக்கீடா மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கி யோரொப்பிலா வானந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே

திருக்குறள்

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

ஔவை குறள்

சிக்கெனத் நேர்ந்துகோள் சிந்தையி லீசனை
மிக்க மலத்தை விடு
சிந்தையு ணின்ற சிவனருள் பேற்றக்கால்
பந்தமாம் பாச மறும்

சீவன் சிவலிங்கமாகத் தெளிந்தவர் நம்
பாவ நசிக்கும் பரிந்து

என்பவற்றால் துரிசு, பொய், மலவிருள், திரிமலம் களிம்பு, பற்று, பந்தமாம் பாசம், பாவம் என்னும் பல பெயர்களை யுடைய மனத்தைப் பற்றிய மலமென்னுங் குற்றங்கள் சிவத்தைச் சிந்தையில் அறிதலால் நீங்குமென்றாம்,

சிவமென்பது அறிவே யென்றும், அதுவே குருவின் வடிவ மென்றும், அதனை யறிவதே ஞானம், கண், பற்றற்றான் பற்றினைப் பற்றல், சிவனருள் என்றும் பெறப் பட்டன.

திருமூலர்

வெல்லு மளவில் விடுமின் வெகுளியைச்
செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலு மருளுடன் றூங்கினல்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே

மனத்தின் இரசோகுணத் தன்மை விளையாதபடி செய்து அறிவை யறிதலில் சிந்தையைச் செலுத்தி யமைந் திருத்தலால் உடலை நானென் றபிமானித்தலாய அகங்காரம் ஒழிந்து உட லறியப்படாத வெளிமயத் தன்மை விளைவாகும்; 'கல்' என்றது அகங்காரமாதலை. தாயுமானர்: 'காராரு மாணவக் காட்டைக் களைந்தறக் கண் டகங்கார மென்னுங் கல்லைப் பிளந்து' என்றமை யால் போதரும். அகங்கார மென்பது மும்மலங்களில் ஒன்றாய ஆணவச்செய லாகும்.

'அருளுடன் றூங்கினல் கல்லும் பிளந்து கடுவெளி யாமே' என்றதால் அருளுடன் தூங்கினல் ஆணவமாதி மலங்க ளொழியு மென்பதாயிற்று. முற்கூறிய விடத்துத் திரிமலத் தீர்வு மனம் ஞானநெறியி னிற்பதாலாகும் என்பது பெறப்பட்டது. ஈண்டு அகங்காரத்தீர்வு அருளுடன் றூங்கி லாகும் எனவாதலின் **அருள்** என்பது ஞானமெனப் பெறப்படும். ஆதலின் அருளுடன் தூங்கலாவது அறிவான் சிவத்தை யறிந்தவண்ண மிருத்த

லாய ஞானநெறியி னிற்றல் என்பதாகும். குருவி னுருவங் குறித்தல், அருளுடன் றூங்கல், சோதியுட னென்றல் என்பன ஞானநெறியி னிற்றல் என்னும் பொருளன. ஆகவே, திருவருள் என்பது ஞானமெனப் போதரும். சிவத்தை யறிதலே ஞானமாகும். ' **அல்லும் பகலு** மருளுடன் தூங்கினால் ' என்றமையால் இடைவி டாது நீடித்த ஞானப்பயிற்சியால் மலம் ஒழியும். அதனால் அறிவாஞ்சிவம் தெள்ளிதின் விளங்கி பெறற்கரிய பேறு கள் வாய்க்கு மென வறியற் பாற்று.

## சிவப் பிரகாசம்

அறிவாம் பரத்தை மனம் நாடிநின்று பெயர்ச்சியுறு தமையவும் நுகரற்குரிய (பிராரத்த) வினைக்கீடாக உடல் வாழ்தற்பொருட்டு மனம் அகநாட்டத்தி னின்றும்மீண்டு புறநாட்டத்தை யுறினும் அறிவை நாடி யாறுதலுற்ற பழக்கவலியான் அது தன் மிகுதியாய நாட்டத்தை அறி வினிடத்தே யிருக்கவும் ஒருசிறிது நோக்கம் லக்ஷியமற்ற பான்மையாகப் பொருந்தி யுடல் வாழ்க்கைக்காக வந்து கூடுமவற்றை நுகர்தலில் பொருந்தியும் இடைவிடாத ஞானப் பயிற்சியான் மனத்தாலாய பற்று முதலிய மலங் கள் நீங்கப்பெறும். அறிவு தடைகளற்றுத் தெளிவா யொளிரும்.

திருநாவுக்கரசர்

மெய்ம்மையா முழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனு நீரைப் பாய்ச்சித்

தம்மையு நோக்கிக் கண்டு தகவெனும் வெளி யிட்டுச்
செம்மையு ணிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே

" உண்மைப்பொருளா மறிவை யாராய்ந்து அதைய டைய விருப்புண்டாகப் பொய்மையாயப் போக்காய உலக நாட்டத்திற் பற்றுறுதிகள் களையப்பெற்று மனம் அமைதி யை யடைய அறிவுவடிவை நாடி, யதினின்றும் பிரிதலுறு திருப்பதாய வெளி யிடப்பெற் றிருத்தலாஞ் செந்நெறி கைக்கொள்ளப் பட்டபோது மெய்ப்பொருண்மையாய இன்ப நிலை வாய்க்கும்.

அறிவுவடிவ சிவத்தைப் பிரியாது உணர்தலாய சேர் தலைச் செய்யின் இன்னொரு பிறப்பி னின்றி யிம்மையி லேயே நன்னலங்களையும் சிவதரிசனமாய வீட்டின்பத் தையும் அடைதலாகும்.

சுந்தரமூர்த்தியார்

பல்லடியார் பணிக்குப் பரிவானைப் பாடியாடும்
பத்தர்க் கன்புடையானைச்
செல்லடியே நெருக்கித் திறம்பாது சேர்ந்தவர்க்கே
சித்தி முத்தி செய்வானை
நல்லடியார்மனத் தேய்ப்பினில் வைப்பை
நானுறு குறையறிந் தருள்புரிவானை
வல்லடியார் மனத்திச்சை யுளானை வலிவலந்
தனில்வந்து கண்டேனே

விளங்குகிற சிவமா மறிவைப் பிரியாது நெருங்கி நாடியவண்ண மிருப்பதால் பரமபதி நன்கறியப் பட்டு அதனால் சித்திமுத்திக ளடையப்பெறுவர்.

திருஞானசம்பந்தர்

உறவியு மின்புறு சீரு மோங்குதல் வீடெளி தாகித்
துறவியுங் கூட்டமுங் காட்டித் துன்பமு மின்பமுந்
தோற்றி
மறவியேன் சிந்தனை மாற்றி வாழ வல்லார் தமக்கென்றும்
பிறவி யறுக்கும் பிரானூர் பெரும்புலியூர் பிரியாரே

திருக்களிற்றுப்படியார்

உள்ளும் புறம்பும் நினைப்பொழியி லுன்னிடையே
வள்ளலெழுந் தருளும் மாதிநெடுந்—தெள்ளி
அறிந்தொழிவா யன்றியே வன்புடைமை யாமாயின்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய்

உலக நோக்கில் மனம்நினைத்தலும் அகத்தே மனோ ராச்சியஞ் செய்தலும் ஆய நினைவற்று அமைதி பெற்ற போது இன்பமயமங்கையைப் பிரியாத அறிவாமன்னால் செவ்விதாக விளங்கும்.

திருமூலர்

அறிவறி வென்ற ரற்று முலகம்
அறிவறி யாமை யாரு மறியார்
அறிவறி யாமை கடந்தறி வானல்
அறிவறி யாமை யழகிய வாறே

அறிவை யறியும்போது ஐயுணர்வும் மனநினைவும் அவற்றின் இன்மைகளுமான சாக்கிர சொப்பன சுழுப்தி யென்னு நிலைகள் நிகழாமல் அறிதுயிலுண்டாகும். உலகை யறிகின்ற ஐம்பொறி யறிவையும் அவற்றின் இன்மையையும் அறிவறியாமை யென்னப்பட்டன.

திருமாளிகைத் தேவர்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந்தேனே
அளிவள ருள்ளத் தானந்தக்கனியே யம்பலமாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன்
விளம்புமா விளம்பே

'உணர்வுசூழ் கடந்த' என்பதில் சூழ்ந்துள்ள ஐயுணர்வையே உணர்வெனப் பட்டது அஃது அறிவு அறியாமை யென்னும் பகுப்பில் அறிவின்பாற் சாரும். அஃது உலகவிஷய அறிவாகும். 'உணர்வே' என்றது ஐயுணர்வாலறியப்படாத அறிவுவடிவ பரம்பொருளை யாகும்.

திருமூலர்

உன்னு மளவி லுணரு மொருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னு ளிருக்கு மிளையா விளக்கினை
அன்ன மயமென் றறிந்துகொண் டேனே

எதையும் நினைக்குங்கால் அதனை யுணருகின்றதாய அறிவாஞ் சாட்சியே மறைகளுணர்த்தும் பரம்பொருளாகும். அஃது உடலுக்குள் என்றும் அறிவொ யொளிர்வதாகும். 'அன்னமய' மென்பது உள்ளிருந்து உணரும் அறிவு அத்தகைய அறிவாக விளக்கமென அறிவார் அறிந்ததாகும்.

அறிவுக் கழிவில்லை யாக்கமு மில்லை
அறிவுக் கறிவல்ல தாதார மில்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறைகின்றன மறை யீறுக டானே

சான்றுயுள்ள அறிவுக்கு ஆகலும் அழிதலு மில்லை யென்றும், ஐயறிவு முதலிய உணர்வுகட் கெல்லாம் அஃது ஆதாரமானதென்றும், தீபம் தன்னொளியாலேயே தன்னை விளக்குவதுபோல் தன்னறிவாலேயே தான் விளங்குவ தென்றும் மறைமுடிபு கூறும்.

தாயுமானவர்

அறிவி லறியாமை யற்றறி வாய்நின்று
பிறிவற வானந்தமயம் பெற்றுக்—குறியவிழ்ந்தால்
அன்றைக் குடல்வேண்டே னையாவிவ் வாக்கையையே
என்றைக்கும் வேண்டுவனே யான்

அறிவாம் மெய்யை யறியாதிருக்கச் செய்கின்ற உலக வறிவையும், அதனின்மையாய மறதியையும் (விழிப்பு வெறு முறக்க நிலைகளை) விட்டு அறிவை யுணர்ந் திருத்த லாய அறிவாக நிலைபெறுதல் கூடுகின்ற பேரின்பமயமாகி இது, இது வெனும் பிறிது தோன்றாத நிலையுறும்வரை உடல்வேண்டும். அந்நிலை முடிவாய தாதலின் அதுவாய்த் தபின் உடல் கொண்டு அடையத்தக்கது வேறொன்று மிலாமையால் அப்போது உடல் வேண்டப்படுவ தின்று.

போதமென்பதே விளக்கொவ்வு மவித்தைபொய் யிருளாந்
தீதிலா விளக்கெடுத் திருட்டை வஞ்சிக்கா

தாதலா லறிவாய் நின்றவிடத் தறியாமை
யேதுமில்லையென் றெம்பிரான் சுருதியே யியம்பும்

போதமென்னும் அறிவாஞ் சிவநிலை அறியாமையா மிருளைத் துரத்துகின்ற விளக்க நிலையாதலின் பரசிவமாம் அறிவுநிலையாக மனம் நிலைபெற்ற போது அஞ்ஞானத்தாலாய அன்னிய வெப்பொருளுங் காணப்பெறுவதின்று. தன்னந்தனி நின்ற தகைமையதான நிலைப்பேறுதி விளையும்.

திருமூலர்

அறிவறி கின்ற வறிவு நனவாம்
அறிவறி யாமை யடையக் கனவாம்
அறிவறி யவ்வறி யாமை சுழுத்தி
அறிவறி வாகு மான துரியமே

ஐம்பொறியுணர்வை அறிவு சாட்சியாய் நின்று அறிவது நனவெனுஞ் சாக்கிராவத்தையாம் (விழிப்புநிலை.) ஐம்பொறிகள் தொழில் செய்யாமலிருக்க மனம் முன்னறிந்த உலகக் காட்சியின் நினைவையும் பிற கருதுதலையுஞ் செய்வதை அறிவாஞ் சிவம் சான்று யறிவது கனவெனுஞ் சொப்பனநிலை. இந்நிலையில்உலகப்பொருள்களை ஐயுணர்வு அறியா திருப்பதாய அறியாமைக்கு அறிவாஞ் சிவம் சாட்சியாகும். மனமுந் தொழிலற்று நிற்க மனத்தால் முன் விளைந்த நினைவும் கருதுதலும் இல்லாதனவாக அவற்றின் இன்மையை அறிவு கரியாநின்றறிவது சுழுப்தியென்னும் வெறுமுறக்கநிலை. சாக்கிரமென்னும் விழிப்பு நிலையிலேயே மனம் பொறிவாயிலா யுகைப் பொருள்

களை நாடுவதினின்றும் மீண்டு; சாட்சியாய்ச் சலனமற்று நிற்கிற அறிவை நாடி; யதை விஷயமாக அறிவது தான் துரியநிலை. இதன் முதிர்ச்சியால் மனம் அறிவோடொன்றி யறிவாகி அவ்வறிவின் அறிவு (ஞானம்) விளையும். இதுவே 'மறைந்தபொருள் வெளியாக்குந் துரியங் கண்டாய்' என்றவண்ணம் முழுது முணரப்பெறும் முற்றுணர் வுண்டாகிற சிவநிலை யாகும். இந்நிலையின் தொடக்கத்தே மனத்தால் உலகப்பொரு ளொன்று கருதப்படின் விளங்குந் தூர தரிசன முதலிய சித்திக ளடையப் பெறு நிலையா யமையும். அறிவறியு நிலையின் முதிர்ச்சியில் அறிவாஞ் சிவத்துக்கு வேறாக எப்பொருளுங் காணப் பெறாத ஏகபர சிவமே விளங்கும்.

எல்லா மறியு மறிவுதன்னை விட்டு
எல்லா மறிந்து மிலாபமங் கில்லை
எல்லா மறிந்த வறிவினை நானென்னில்
எல்லா மறிந்த விறையென லாமே

என்னு மருளுரையால் எல்லாவற்றையுஞ் சாட்சியா யறிந்தபடி யிருக்கும் அறிவை விட்டு உலகப் பொருள்களாய் வெல்லா மறிந் திருப்பதால் பயனின்று; பொருள்களை சாட்சியா நின்றுணருகின்ற அறிவை நானென்பதன் பொருளாக வுணரப் பெறின் முழுது முணருஞ் சிவமென்னப்படு மேனிலை வாய்க்கும் எனவறியவுளது.

அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலார்
அஞ்சு மடக்கு மமரரு மங்கில்லை
அஞ்சு மடக்கி லசேதனமா மென்றிட்
டஞ்சு மடக்கா வறிவறிந் தேனே

ஐம்பொறி யடங்கிய பின்னே தான் அறிவானது சிவத்தை யறியத் தகுமென்று ஐம்புலன்களை யடக்கமுற்பட்டு அவையடங்காமல் அதனால் காலத்தைக் கழிப்ப தொண்ணுததாகும். உணர்வாக விளங்கு மறிவை மனம் நாடி யிருக்க முற்பட்டால் மனமடங்க, ஐம்பொறிகளும் தாமே யடங்கப்பெறும் என்பதால் எத்தொழில் செய்யப்பட்ட போதும் உணர்வாய் ஒரு நிலையா (நிச்சலமா) யிருப்பதாக அறியப் படுகிற அறிவின் நாட்டமே மன வடக்கத்தை யுண்டாக்கி சிவமாம் அறிவுவிளக்கத்தை யாக்கு மென்பது அறியவுளது.

> செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
> செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
> செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
> செயலற் றிருப்பார்க்கே செய்தியுண்டாமே

மனம் செயலற் றிருப்பின் உள்ளபொருளாய அறிவே மிஞ்சியதாக அதனை யுணர்ந்தவண்ணம் அமையப் பெறும். அதனால் சிவானந்த மென்னும் பேரின்ப ஆறுதலுறும். மனத்தின் செயலற்ற நிலை வாய்க்கப் பெற்றவர் இனி, சாதிக்க சிவயோகப் பயிற்சியைத் தேடார்; யோக சாதனையால் ஆகவேண்டிய மனவமைதி கைவந் திருப்பதனால். மனவெழுச்சி யுற்று அலைகின்ற பிறமக்களோடு கலந்து வாழ்தலை மனவமைதி யுற்றவர் அடையார்; பின், பிரிந்திருப்பார். அங்ஙனம் மனத்தின் நினைவானது செயலற்றவர்க்கே உலக முழுதிலும் நடைபெறும் செயல்களை யெல்லாம் அறியக்கூடிய தகைமையை யடையப்பெறுவர் என்பது தெளிவு.

சிவதருமோத்தரம்

அட்டமா சித்தியென்ற வணிமாதி யவர்க்கே யாகும்
இட்டமாம் சந்தோபேத மியற்றவும் வல்ல ரென்னின்
முட்டற வேதமாதி மொழியவும் வல்லர் நல்ல
துட்டியாற் சமாதி தன்னிற் றுலங்கிய தூயோர்தாமே

சமர்தியாம் ஞானநிட்டையால் எண்வகைச் சித்திப் பேறுகளும், சந்தசுகளை யியற்றலாகிய சிறந்த கவி புனையு மறிவும், வேதமாதி யரும்பொருள்களை விரித்துரைக்க வல்லதன்மையும் அடையக்கூடும்.

ஔவை குறள்

அட்டமா சித்தி யடையுமோ ராண்டினில்
இட்ட மிதனைத் தெளி

ஓராண்டு ஞானநெறியிற் பிரிதலின்றி நிற்பதால் எண் பெருஞ் சித்திகளு முண்டா மென்பது உணரத்தக்கது.

திருக்குறள்

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு

செம்பொருளா மறிவை யறிதலாய ஞானமுற்ற வர்க்கு மேற் பிறப்புக்கள் சாரா.

## சித்தாந்தம்

சிவமாம் அறிவை யறிதலாய ஞானப் பயிற்சியை யிடை யீடின்றி யியற்றுதல் எக்காலத்தும் எம்முயற்சியி லும் உறுவது கூடினும் மேம்பட்ட நிலையினையும், மாறுச்

சுகத்தையும் பூரணமாக விப்பயிற்சியால் அடைவது இய லாது. ஆதலின், மனம் சிலகாலம் எத்தொழிலாலும் எழுச் சியை யடையப்பெறுதபடி தனித்திருந்து சமாதியென்னு நிட்டையை யடைந்து முதிர்ச்சிபெற வேண்டும்.

அறிபொருளை விட்டகன்று லழியுஞ் சித்தம்
அந்தநிலை வியாபார மனைத்து மில்லாச்
செறிநனவிற் சுழுத்தியா மிதனை நாளுந்
தீராத பரிசயமே செய்யச் செய்யப்
பிறிவின்றது துரியமா மென்பர் மேலோர்
பிழையிலா விதனிலே நிலைமை பெற்றுக்
குறியறு மானந்த மேகாந்த சீலக்
கொள்கையா லணைந்தங் கூடு மன்றே

'அறிபொருளை' யென்பது எதிரிட்டுக் காணுமவற்றை யெனப்பெறும்.

### சிவதருமோத்தரம்

பொருளெனு மாத்தி ரத்தாய்ப் புலனிறந் திரவி கண்ணுக்
கிருளறுத் திலங்க லென்ன வெண்ணகத் திலங்கி யெங்குந்
திரையற வுததி யெல்லாந் தேங்கல்போல் விம்மிச் சித்தங்
கருதுரு வல்லா மூலங் கண்டிரண் டறல்ச மாதி

என்பதால் அறிவாஞ் சிவமாத்திரத்தையே புணர்ந்த படியும் ஐம்புல னெறி மனஞ் செல்லாதபடியும் இருளைப் பார்த்த விழி பின் பிரகாசத்தைக் கண்டாற்போல் தெளி வுற்றும், அலையற்ற சாகரம்போல் மனம் அமைதியா யிருக்க மூலமாம் சிவத்தை வேறாக விருந்து அறிதலின் றித் தானே தன்னை யறியப்பெறு நிலை யுறும்.

இத்தகைய ஞானப்பொருளைச் செவியாற் கேட்டறிதலும், இந்நெறி யித்தகையதென்று உள்ளத்தி லுணர்ந்திருத்தலு மட்டும் போதா. உள்ளதை யுணர்ந் துணர்ந்து அதன்வண்ண மன மாகின்றவரையில் உணர்தலாய நிட்டையைப் புரிந்தே தீரவேண்டும்.

### தாயுமானர்

கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமுறு வுற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோ தான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்

அறிவாந் தன்னைத் தன்னால் நாடி யறிதலாய உண்மை ஞான நெறியாம் நிட்டையையுடைய உயிர் ஓயாது வருகின்ற பிறவிப் பிணியினின்றுந் தப்பும். விழிப்புற்றவர்க்குக் கனவு பொய்யாவது போலப் பிறத்தலு மிறத்தலு முடைய உலக வாழ்க்கையும் உலக நிகழ்ச்சியும் துரியநிலை யென்னும் பாவிழிப்பில் பொய்யாகும்.

### சிவஞான போதம்

அவனே தானே யாகிய வந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே

சிவமென்பதும் தானென்பதும் வெவ்வே றென்பதின்றி யொன்று யிருக்கின்றமை யறிந்து நிற்றல் வாய்த்தவிடத்து மலமாயை வினைக ளென்பன இலவாகும்.

தன்னை யறிதலே மேலாம் ஞானமாகும். தான் அறிவாஞ் சிவமாய் ஒளிரு வதை யுணர்தலே பெறுதற்குரிய பேருகும்.

திருமூலர்

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் ருனே கெடுகின்ருன்
தன்னை யறியு மறிவை யறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே

'தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே'

'என்னை யறிந்திலே னித்தனை காலமும்
என்னை யறிந்தபி னேது மறிந்திலேன்'

தாயுமானர்

அன்னை போல வருண்மி குத்து
மன்னு ஞான வரதனே
என்னையே யெனக்க ளித்த
நின்னை யானு நினைவனே

மாக்ஸ் முல்லர்

'கிரீக் தேசத்தியவர்மேலான ஞான மெனக் கொள்ளுவதும், இந்து தேசத்தியவர் மேலான ஞானமெனக் கொள்ளுவதும் நம்மை நா மறிவதே யாகும்.'

என்னு மிவற்ருல் உயிர்களின் உண்மைவடிவம் அறிவாகும்; அவ்வறிவை யறிந்ததே அடையவேண்டியதை யடைந்ததாகும் எனத்துணியப் பெறுமுடி பாகும்.

## ஞானியரியல்

அறிவறிந்த அறிஞராம் ஞானிகள் உலக மயக் கற்றவராய், அச்ச மற்றவராய்த், தீரராய்ப், பற்றற்றவராய், உலகினரோடு கூடி அகப்பற்றற்ற வாழ்வினராகவேனும், புறப்பற்று மற்றுத் தனித்துத் துறவியராகவேனும், இருப்பர். பேதையருடன் கலவாமலும் கலந்தால் அப்பேதையர்தம் அறியாமை செயல்களைக் கண்டு நகைக்கும் பித்தர்போன்றவராய், உள்ளத் தெளிவினராய் விளங்குவர்.

### திருமூலர்

மலமில்லை மாசில்லை மானுபி மானக்
குலமில்லை கோளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே

'நந்தி' யென்றது ஆண்டு மனத்தை யாகும்.

### சிவஞான சித்தியார்

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமிலை விரதமோ டாச்சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமலமில்லை
கோலமில்லை புலனில்லை கரணமில்லை
குணமில்லை குறியில்லை குலமில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்

குணங்குற்றமெனப் பாரார் ஞானிகள். அவர்கள் பற்றோடு விரும்பத்தக்க பொருள் உலகில் ஒன்றுமின்று. ஆசாரம், தவம்புரிதல், விரதம், தியானங்களும், சந்நியாச முதலிய பகுப்பு நிலைகளும், மனப்பற்றும், அலங்கரித்த லும் அவர்கட்கில்லை. ஐம்பொறி புணர்வும் மனச்செய லுமிரா. இன்னகுணத்தர் இக்குறிப்பினர் என்னப்படு வதுமில்லை. மதலைகள், பித்தர், பேயர்போன்று சஞ்சரித் தலை யுறினு முறுவர். அன்றி, உலகினரோடு கூடி வாழி னும் வாழ்வர்.

## ஞானியரைப் பேணுவார் பெறும் பயன்

ஞானப் பயிற்சி யுடையாரை யவர்க்காவன செய்தலாய தொண்டு புரியு நல்லோர் இம்மைச் சீர்களையெல்லாம் எய் தியும், மீண்டு மீண்டும் பிறத்தலை யுறாதவண்ணம் எடுத்த அப்பிறப்பிலேயே யன்றி யடுத்த வொரு பிறப்பிலே கன் மானுட்டானங்களால் காலத்தை வீணே கடத்தாமல் சிவஞான முண்டாகி சிவத்தைச் சாரப்பெறுவர்.

**சிவஞான சித்தியார்**

சிவஞானச் செயலுடையோர் கையிற்றானந்
　திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினமுந் தாத வகையெடுத்துப்
　பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றின் சாரப் பண்ணிச்
　சரியை கிரியா யோகந்தன்னி லுஞ் சாராமே
நவமாகுந் தத்துவ ஞானத்தை நல்கி
　நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே

சிவஞானப் பயிற்சியை யுடையார்க்கு ஆகவேண்டிய வற்றைச் செய்பவர் இம்மையில் சீரிய செல்வாதிகளால் சுகத்தையும், மேலாய தத்துவஞான முண்டாகி சிவத்தோடு வாழ்தலையும் பெறுவர்.

பரப்பிரம மிவனென்றும் பரசிவன் றானென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன் றானென்றும்
அரன்றருஞ் சீர்நிலை யெல்லா மிவனே யென்று
மருட் குருவை வழிபடவே யவனிவன் றானுமே
இரங்கிய வாரணம்யாமை மீனண்டஞ் சினையை
யியல்பினொடும் பரிசித்து நினைத்தும் பார்த்தும்
பரிந்திவை தாமாக்குமாபோற் சிவமேயாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே

ஆமை, மீன், கோழி (பறவை) கள் தத்தம் முட்டைகளை முறையே சிந்தித்தும், பார்த்தும், பரிசித்தும் தம்போல் உருவுபெறச் செய்வதுபோல் ஞானத்தையடையச்செய்யுந் திறமை ஞானவான்கட் குண்டாயிருத்தலின் அவர்கட் காவனபுரிந்து அணுகி யொழுகுவார் இத்தகைய வருளால் இன்பப்பேறடைவர்.

## ஞானிய ரீறு

ஞானியர்தம் உடல் வாழ்க்கையின் திறத்தைப் பற்றி யறியின் வாயுவை யடக்கும் பழக்கமுடைய யோக சித்தஞானிகட்கும் ஞானநெறியி னிற்றலைப் பொருந்திய சுத்த ஞானிகட்கும் உடலின் வாழ்க்கை வேறுபடுவன வாகும்.

**திருக்குறள்**

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

யோகநெறியால் குண்டலி நாடியையெழுப்பிப் பிரம ரந்திரமென்னுங் கபால விடத்துள் எண்ணற்ற ரேகைகள் போன்ற மடிப்புக்களையுடைய மூளையா மாயிர விதழ்க் கமலமென் றுருவகிக்கப் பெற்ற மலர்மிசை விளங்கும் அறிவுவடிவ சிவத்தை யறிந்த யோகிகள் உலகத்தில் நீண்டகாலம் உடலோடு கூடி வாழ்தலைப் பொருந்துவர். இவர்களே யோக சித்த ஞானிகளாக விளங்குவர்.

**ஔவை குறள்**

அகம்புறம் பேராப் பொருளை யறியில்
உகம்பல காட்டு முடம்பு

என்பதால் யோகசித்த ஞானியர் பலயுகங்கள் காறும் உடலோடு வாழ்தலைப் பெறுவர் என வறியத்தக்கது.

யோகநெறியி னிற்றல், கற்பவுணவு முதலியவற்றால் காயத்தை நீடு வாழத் தக்கபடி செய்துகொண்ட யோக ஞானியர் எண்ணிலிகாலம் தமக் கிசைந்த விடங்களில் ஆன்ற ஞானசமாதியி லிருந்து காலங் கண்டவரா யிருப் பர். அவர் பிறருக்குப் புலப்படா துறையத் தக்க உடல் விஞ்சை யுடையவராயும், உலகினும் பிற அண்டங்களி லும் சஞ்சரிப்பவராயு மிருப்பர். வாயுவடக்கிப் பயிலும் யோகுநெறியினையும் காயகற்பங் கொள்ளுதலையு முடைய யோகசித்த ஞானியர்க்கு உடல்நீடித்த காலம் இருக்கு மெனப்பெறப்பட்டது. அந்நெறியின் இன்றி மனத்தைத்

தூய்மையாக்கி யறிவறிதலாய ஞானப்பயிற்சியைப் பெற்ற சுத்த ஞானிகட்கு உடல் இருக்கவேண்டியகாலம்வரை யிருந்து பின் நீங்கும்.

திருக்குறள்

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி

சிவவியலைச் செவ்விதா யாய்ந்தறிந்து மெய்ப்பொருளாய அறிவை யறிவாற்கண்ட ஞானிகள் மீண்டும் இவ்வுலகிடை உடலோடு கூடி வாழ்தலாகிய பிறப்பினை யடையார். எனவே, யோகநெறியால் ஞானமுற்றவை ரல்லாத ஞானநெறியால் சிவவடைவுற்ற சுத்தஞானிகளின் உடம்பு பிரிதலையுறும் ; மீண்டும் அவர்க்கு உடல்பெற்று வாழ்தலாகிய பிறப்பில்லை யென்பது பெறப்படும். இவ்வாற்றால் சுத்தஞானியர்தம் உடம்பு பிரிவுறும் என்பது அறியத் தக்கது.

திருமூலர்

அந்தமில் ஞானி யருளை யடைந்தக்கால்
அந்த வுடறான் குகைசெய் திருந்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமி லின்ப வருள்பெறு வாரே

நிலையாகிய அறிவுவடிவ சிவமான ஞானிக்குப் பொருந்திய வுடல்வாழ்க்கையுமற்றுத் தனித்தலாய பேரருளை யடைந்தபோது அந்த ஞானியின் உடல் நிலத்தினுள் சேமிக்கப்படின் நிலமாளு மன்னரும், மக்களும் எண்ணியன வெய்தப்பெற்றும் நன்ஞானமுண்டாகி யின்பப்பேறு முறுவர்.

ஞானியர் சிவமறிந்து சிவமாக நிலைத்தவ ராதலின் அவர் தம் உடற்சேம விடத்தின் மீது சிவக்குறி நிறுவப் பெறுவது வழக்காக வுளது. ஞானியர்தம் இத்தகைய உடற்சேம விடங்கள் மக்கள் மன்னர் முதலியோரான் ஆலயமாகக் கட்டவும்பெற்ற அத்தகைய ஆலயங்களும் மக்கள் நெறி யுணர்தற் கமையப் பெற்ற ஆலயங்களும் வேற்றுமை யுணரக் கூடாதபடி யுள்ளன. ஞானியர் தம் உடற்கமைந்த காலவளவு கழிந்தது முடற்பிரிவுறு மென் பது பெறப்பட்டது.

## உல காக்கம்

ஞானியர் தம் ஆற்றற்பேற்றால் பல் பொருள்களை யாக்கல் முதலியன எண்ணிய மாத்திரத்தான் இயற்ற வல்லுநராவர்.

### திருக்குறள்

ஐந்தவித்தா னாற்றலகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி

செயற்கரிய செய்வார் பெரியார் சிறியார்
செயற்கரிய செய்கலா தார்

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

அந்தண ரென்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்பவற்றால் ஞானியர் ஞானமாய உரத்தால் ஆற்றன்மிக்கு அரியன செய்பவராய், நிறைமொழியாய ஆற்றன்மொழி யுடையராய், பிறவுயிர்கண் மாட்டு இரங்கும் பெற்றியரா யவர்க்குச் செம்மையுண்டாக்குபவரா யிருப்பர் எனப்பெறப்படும்.

அவர்தம் அமைதியும் ஆற்றலு முற்ற மனமே இத்தகைய அரியசெயல்களை யாக்கும் வன்மை யுற்றதாகும். பொதுவாக, மக்கள் தம்மனத்தால் கனவில் பொய்ப்பொருளை யுண்டாக்குகின்றனர். மனவசீகர ஜாலவித்தைவல்லவர் ஐம்புலன்களாலறிதற்குமட்டு மியைந்தபொருள்களாகத் தம்மனத்தா லாக்கிப் புலப்படுத்துவர். ஞானியரோ தம்மன வாற்றலால் நுகர்தற் குரியனவாகப் பலகாலம் அப்பொருள்க ளிருக்கத் தக்கவையாக விளைவிப்பர். எனவே படைப்புமுதலியன செய்ய வல்லுநர் ஞானியர் என விளங்கும். இதனுன் மனமென்னும் ஆற்றல் முன் இல்லாதனவாய பொருள்களையும், இருப்பது போன்றவைகளையும் ஆக்குந் திண்ணிய பெற்றியதென வுணரவுளது.

திருமூலர்

**மனமாயை மாயை யிம்மாயை மயக்கம்**

மனமாயை தான்மாயு மற்றொன்று மில்லை
பிணமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டாந்
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே

ஆதல்பற்றியே மனத்தை மாயையாஞ் சத்தி யென்பர்.

'பொறிவாயி லைந்தவித்தான்' என்னுங் கடவுளியல் ஓரைந்துங் காப்பான், ஐந்தவித்தான் என்று ஞானிக்கும்

'அறவாழி யந்தணன்' என்னும் மெய்ப்பொருளியல், 'அந் தணரென்போர் அறவோர்' என்று ஞானிக்கும் திருக் குறள் ஓத்துவர வருளுவதாலும்; 'வேண்டுதல் வேண்டா மை யிலான்' என்னுஞ் செம்பொருளியல் '**வேண்டா விருப்பும் வெறுப்பும்**' என்று ஞான நெறியாளர்க்குப் பொ ருந்தத் தாயுமானுர் அருளுவதாலும் ஞானிகளின் அறிவு மயவடிவமே மெய்ப்பொருளாங் கடவுள்வடிவமாம் எனத் திரமாக வுணரவுளது. ஞானிகளென்பார் அறிவறிந்தாரா வர். இஃதெவர்க்கும் இயல்வதாக வமைதலின் ஞானநெறி யினைக் கடைப்பிடித்துப் பெரும் பேறு பெறுதற்கே யெவ ரும் எவ்வாற்றானும் முற்பட வேண்டுதல் கடமை.

தன் அறிவுநிலையை யறிதலாய நுண்ணிய அறிவுதகை மையை யுறுவதோடு பிறவி நின்று விடும். இதனால், உயிர் களின் பிறப்பும் விருத்தியும் உணர்வு வளர்ச்சியினைப் பொ ருத்ததெனவுணறற்பாலது. நிலம் முதலிய சடப்பொருளி லிருந்து புல்பூண்டு செடிகொடி மரங்களாம் ஓரறிவுயிர் ஆதியாக ஐயுணர் வுயிர்களும், பகுத்தறியு மனவறி வுடைய மக்கள்காறும் உடலுமுணர்வும் வளர்ச்சியுற்று அறிவறிதலா மெய்ப்பொரு ளுணர்வோடு அவ்வளர்ச்சி முற்றுப்பெற்று நின்றுவிடுவதென வறியற் பாற்று.

மெய்ப்பொருளியலைக் குறுகும் நெறியி னேறிவரும் உயிர்களாமக்கள் மெய்ப்பொருளை யறியும் முடிவானநிலைவ ரையும் மனிதப்பிறவியையே யடைந்து வருவரென்பதும் கடவுட் டன்மையை நெருங்கப் பெறுமல் மாறுய விலங்கு களின் உணர்வினையுஞ் செயல்களையு முடைய மக்கட்பிறப் பினர் இழிந்த மாக்கள் (மிருக) பிறவியை யடைதற்கிய

லவுங்கூடு மென்பதும் உற்றுணரத் தக்கவை. ஆகவே மெய்ப்பொருளை யறியத்தக்க மெய்ஞ்ஞானப் படித்துறை யில் பழகுதலே மக்கட்பிறப்பால் அடையக்கூடிய மேலாய வாழ்க்கை யாகும்.

**இனிப்பிறவா முடிவான பிறப்பிலே மெய்ஞ்ஞான**
**மெளிதி லுண்டாம்**
*பனிச்சுடர் வெண்ணித்திலங்க ளுத்தமமா மூங்கிலல்லாற்*
*படுவதுண்டோ*
*செனித்தவரின் மேலோராய் நல்லோராய் மித்திரராய்த்*
*தெளிந்தோ ராகி*
*அனித்தமறு முத்தராய் ஞானிகளாங் குணமெல்லா*
*மவரைச் சேரும்*

இதனால் அறிவை யறிதலாய முழுவளர்ச்சி யுற்ற வுணர் வுடையவர்கட்குப் பிறப்பு அவ்வளவோடு முற்றுப் பெறுமென்பது தேறிய தெளிவாகும்.

உண்மை ஞான நெறியை யுணர்ந்தோரை யடுத்து உறைதலும், மயக்கமுங் கற்பனையு மற்ற தெளிவாய பொருளைக்கூறும் ஞானநூற் பயிற்சியும் கேள்வியு முற்று சாந்தம், அருள், ஆசையின்மை, வாய்மை, சோர்வின்மை முதலிய நற்குணப் பழக்க மேவி யுண்மைப் பொருணுட் டத்து ஆர்வமுற்று வாழ்தலைப் பழக்கத்திற் கொண்டு வருவோர் இனிப் பிறவித் துன்பமுறார்.

## ஞானமுறைத் தொகுதி

வேடர் கூட்டத்தாரால் வளர்க்கப்பெற்ற ஓர் அர சன் மகன் தன்னை வேடுவரி லொருவனாகவெண்ணி யவர்

தந் தொழில் புரியவனுயிருக்க அவனை யிளமையில் சில சின்னங்களோடு அறிந்திருந்த அரையனுட்களி லொருவன் கண்டு குறியறிந்து அவனை யரையன்மகனென விளங்க அவனுக்குரைத்தலும் அவ்வரச குமாரன் தான் வேடுவனல்லனெனவும் அரசன் மகனெனவு மறியப்பெற்றது எவ்வளவுகாலத்தில் எத்தகைய முயற்சியாலாயதோ அவ்வளவில் உணருமோன்றேசிவம், அதுவே நீ யென்று நல்லாசிரியரோ நல்லறிவு நூலோ விளக்க இளம் பருவத்தினர் முதல் முதிர்ந்த பருவத்தினர்வரை யுள்ள எவரும் மெய்ப்பொருளை யறிதலாய ஞானப்பேற்றை யடைவது மிக வெளிதாகும். அங்ஙனம் அறிந்ததனையே யறிந்தபடி நிலைப்பது மியல்வதாகும்.

திருநாவுக்கரசர்

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளு மாற்பேறரே

உண்மைப் பொருளை யுணராமலும் அவ்வழியினிலைபெறாமலும் பலசாத்திரமொழிகளைப் பேச்சளவில் பேசித்திரிதலும், குலகோத்திர மேம்பாடுகளைக் கொண்டாடித்திரிதலும் ஆய பயனற்ற செயல்களைப் புரியாது சிவமாம் மெய்யறிவின்பப் பொருளே தானேயாக வறிய வறிவை நாடுங்கால் மாத்திரைக் காலப்போதில் சிவமாந் தன்னிலை விளங்கும்.

அடியேனை யாள வருண்மேனி சாத்திப்
படிமீது வந்த பரனே—கொடியேனென்

றெண்ணு திமைப்பளவி லிங்ஙனே விடளித்த
கண்ணு கடைபோகக் கா

'செழுந்தரணி தன்னிற் றிருவுருக் கொண்டென்னை
உழுந்துருளும் போழ்தி லுணர்த்த வெழுந்தருளி
வந்தவடி........ ..................................'

எழுந்தசங்கற்ப பாவனைவிட்டா லிறந்துபோ
மிதனையிங் கிதனால்
அழுந்துறமாய்த்து மனத்தினுன் மனத்தை
யறுத்து நின்னறிவி னீநிற்பாய்
உழுந்துருள்போழுதின் முடியுமீ தரிதோ
வுலகமுவானமு மொக்கும்
முழுந்திய பொய்யாய்ப்போம் விகற்பத்தான்
முளைத்தவை யன்றிமுன்னிலதால்

அலர்கசக்குமுன் னிமைக்குமு னகங்கர
மகற்றுத லெளிதாகும்
பலவுரைப்பதெ னேகமா யநந்தமாய்ப்
பரமசித்தே யாகிக்
குலவுசுத்தமாய் விண்ணினு நுண்ணிதாங்
குறைவிலாப் பொருணிற்குஞ்
சலனமற்றதைப் பாவனை செய்துப
சாந்தனு யிடர்தீர்வாய்

நான்-உணரும் அறிவு வடிவ சிவமாமென வுணரு மக்கணமே உடலாதியன என் வடிவமன்று என்றுணரப் பெறுவதால் உடல் முதலியவற்றை நானெனக் கருதலாய அகங்காரத் தன்மை நீங்குவதாகும்.

புறத்துமகத்தும் எதனையும் எண்ணாமல் எதையும் உற்று நோக்காமல் மனம் செயலறநிற்குமாறு அமைதியாய் ஓயவிட ஆங்கு அறிவொன்றே யுள்ளதாய் மிஞ்சுகின்ற மையின் அதனை நாடி யறிந்தபடி யிருத்த லமைவதும் முன்கூறிய நிலையாகும்.

இல்லது வேண்டினும் வந்திசையா
வுள்ளது தள்ளினு மூட்டுமானல்
எல்லாம் வரக்கண்டோ ரிச்சையின்றி
யிருந்தபடியே யிருக்க வாரீர்
பொன்று முடம்பு பொருந்துமின்பம்
புன்னுனை நீராரும் புன்மைநெஞ்சே
என்றறி னெல்லாம் வீழவிட்டே
யிருந்தபடியே யிருக்க வாரீர்

உடலுக்கும் அதனைச்சார்ந்த வுறவினர்கட்கும் பழ வினைப்படி வரக்கூடியவற்றை வேண்டாமெனத் தள்ளி னும் வந்து தீரும்; வாராதன வர விரும்பினும் வாரா வாதலின் வருவனவெல்லாம் வர அவற்றில் விருப்பு வெறுப்பின்றியும் நிலையற்ற வுடலும் அதற்குளவாகுஞ் சுகமும் அற்ப காலவளவே யுளவாதலின் உடற்பாதுகாவ விடத்தும் உலகின்பத்தின் பொருட்டும் பற்றுகொள்ளலை யெல்லாம் தவிர விட்டுச் சான்றாயுணருஞ் சலனமற்ற அறி விருந்தபடியே மனமுஞ் செயலற்றிருத்தலை யடை தல்வேண்டும்.

பகைவரை வெற்றிபெறச் சோர்வின்றி விழிப்பா யிருக்கும் வீரனைப்போல் அறிவை விழிப்பாயிருந்து நாட வேண்டும். இங்ஙனம், உணர்வை யறிந்தபடியிருக்க

இமைப்பளவில் எல்லையற்றதாய்த் தனக்கு வேறாக வில்லாததா யித்தகையதெனச் சுட்டி யுணரக்கூடாததாயுள்ளநிலை வாய்க்கும். இங்ஙனம் விடாதுபயிலும் முயற்சியால் அந்நிலையினின்றும் பிரிவுறுதற்கு விழைவின்றிய வின்பப் பெருக்குளதாகும். இவ்வடைவை யடைவதே யெடுத்த பிறப்பினால் முடிக்கக் கூடியதும் முடிவானதும் பெரியதுமான அரிய ஞானநிலையாகும்.

திருவருட்பயன்

ஓராதே யொன்றையுமுற் றுன்னாதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனைப் பார்

'பார்ப்பானைப் பார்க்கிற் பரஞ்சோதி யாயொளிரும்
பார்க்கத் தெரியாதேல் பாமூலகாம்...............

மின்னினு நொய்திவ் வுடம்பின்றன்மை
மேன்மேலும் வந்திடும் வேதனைகள்
அன்னதே யிவ்வுடம் பாவதனால்
ஆய்வானை யெப்போது மாயவாரீர்

'பார்த்ததனை' 'பார்ப்பானை' 'ஆய்வானை' என்பன அறிகின்ற அறிவை யெனப்பெறப்படும். அதனையறிதலால் உலகவுடற் காட்சிகளற்றுச் சிறந்த ஞானமயமாக விளங்கும் என்பது துணியப்பெறுவதாகும். எதையும் நினையாமல் முன்னிலையாகக் காணப்படுவதுங் கேட்கப் படுவதுமாயவற்றை நாடாமலிருக்க அறிந்து கொண்டிருக்கிற அறிவினையே (தன்னையே) நாடியிருத்தலே முடிந்த ஞானமுறையாகும். அங்ஙனம் அமைந்தவிடத்து உலகங்காணப் படுவதின்று. அன்னணம், அறிவை நாடாதபோது உலகம்

புலப்படுதலியல்பு. ஆகவே, அறிவது தன்னை அறிந்த வண்ணம் நிலைபெறுதலே செயற்கரியசெயலும் பேரின்ப நெறியுமாகும்.

அறிவாய் உணர்வதை யிருந்தபடியே யிருந்து நாடுங்கால் அது சிரத்தினிடத்தே உயரிய பாகத்தேயிருந்து உணர்வதாக வறியப்படும்.

திருமூலர்

'சென்னியில் வைத்த சிவனரு ளாலே'

சென்னியென்னுந் தலையிடந்தான் சிவமாமறிவு விளங்கக்கூடிய சிவஞானம் விளையத்தக்க விடமாகும். இவ்விடமே மூலவிடமாகும். 'மூலமாங்குளம்' முதலிய பல மூலப்பெயர்கள் கொண்டு வழங்குவதெல்லாம் இச் சிரத்தானத்தையே குறிக்கும்.

அறிவு ஒளிர்வதை யுய்த்துணர்ந்தபோது அதனையே நாடி நிற்கப்பெறுவதே ஞான நிலையாக விருக்க இடையே யகத்துள் இருள், வெளி, ஒளி, ஓசை முதலிய அறிபடு பொருள்கள் உட்புலனாயின் அவற்றை யறிதலில் சிந்தையைச் செலுத்தாமல் உணருகின்ற அறிவாய தன்னையே யறிந்தபடி நிலைத்திருத்தலில் பிறழாதிருத்தல் வேண்டும். இன்னணம் நிலைத்தவுடன் மிக்கவுயரத்திருந்து ஒருவன் கீழேகுதிக்குங்காலை யவன் மனநிலை யெங்ஙனமாமோ அங்ஙனமாய திடுக்கிடத்தக்க நிலை திடுமெனத் தோன்றும், அதனால் அறிவை நாடி நிலைத்த மனம் பிறழ்ந்து-நிலையினின்று தவிர்ந்து உலக நோக்குறும். இப்படிப் பலமுறை நேர மனந்திரப்பட்டு

அம்மாறுதலைச் சகிக்கும். அது வாய்த்தபோதுதான் துரியவிழிப்பாயதும், அகண்ட அறிவுமயமாயதும், இத் தகைத்தென வுரைக்க வொண்ணாததுமான அறிவாந் தன்னிலை கூடும். அதனையறிவதாக வொன்று தனித்து நின்று அறிவது மின்றி யமையும். ஆகவே, அந்நிலை யித் தகைத்தென அறிவுறுத்தற் கொண்ணாததாகும். ஆறு தலாம் பேரின்பஞ் சூழும்.

உலகப்பற்றால் உடனே பெயர்ச்சியடையக் கூடிய பற் றுறுதி யழுத்தமாக வில்லாத போது வாய்த்த பேரின்ப ஞானநிலை நீடித்திருக்கும். பற்றுக்கள் விரைந்து எழுப்பு தலைச் செய்யின் அந்நிலை பிரியும். ஆதலின் உலகத்தோடு முறவினரோடும் கூடி வாழினும் அவற்றில் ஆழ்ந்த பற்றுதல் அமையாதவாறு ஒழுகக் கற்றல் ஏற்புடைத் தாகும். அழுந்தியபற்று அற்றுவருதலும் மெய்யுணர்வு நிலைத்தலும் பொருந்திய போது மெய்யின்ப வடைவு ஆகிவரும். எண்ணிய எண்ணியாங்கு இயற்றுமாற்றற் பேறும் நிறைந்த சாந்தமாம் வீட்டுப் பேறும் நிலைத்து மேம்பாடு வேறொன் றின்றி முடிவாய மேனிலையாய் முடியும்.

அமர்ந்தபடியே யிருந்து அறிவாந் தன்னிலையில் கூடப்பெற்ற அறிவாளர் தம் விழிகளைத் திறந்தவண்ணம் விட்டு நிலைபெறுங்கால் கண்ணிமைக ளிரண்டும் சாய் வுடையனவா யிருக்கும். மனம் நிலையினின்றும் மீண்டு விழிப்புலனுக்கு இந்நிலைமையில் புலனுவதை நோக்கின் மூக்கு நுனியே சாய்ந்த இமைகளால் புலனும். அங்ஙன மே நடந்து செல்லுங்காலை அறிவு நாட்டத் திருக்கும்

பெறும்போது விழிகட்கு ஒரு நுகத்தடி (ஏறக்குறைய 2 கஜ அளவு) தூரந் தான் தரைதோன்றிக் கொண்டிருக்கும். இங்ஙனம் ஞானநிலைப் பழக்கத்தே விளையக்கூடிய பார்வையளவுகளையே முன்னூற்கள் துறவினர் இத்தகைய பார்வைகளைப் பெறவேண்டுமென விதித்துள. ஞானநிலையில் தாமாக வமைவதை விட்டு அந்நிலையின் நெறியறியாமலும், அறிந்திருப்பின் அதன்வழி யொழுகாமலுமிருக்கும் துறவியர் வெளிக்குமட்டும் இத்தகைய பார்வைகளைப் பயின்றொழுகுவதாற் பெறும்பயன் யாது வீணேயாகும். ஆதலின் ஞானப்பயிற்சியிலிழிந்து மிக்க விருப்போடுபயின்று மேற்கூறிய வண்ணமெல்லாம் இடையிடையே கூடப்பெறுவதனுல் பற்றியநெறி பிழையின்றியதென வறிந்து நிலைத்தல் கூடும்.

அறிவறிந்த வண்ணங் கிடக்கையி லிருக்கும்போது மிகு சூக்குமமாய் சிவத்தை யறிந்திருத்தல் கூடிவர உறக்க நிலையில் சுவாசித்தல் நீடிப்பதும், உடல் அயர்ந்து கிடத்தலும் அடைவதுபோன்றே யுண்டாகும். அது துயினிலையே யாயினும் தன்னை யறிந்தவண்ண மிருத்தலும், கருதி நோக்கும்போது உறக்க நிலையின் தன்மை அறியப்படுதலுமாக விருக்கும். இதுவே அறிதுயிலென்றும், தூங்காமற் றூங்குவதென்றும், இங்ஙனமிருப்பவர் சோம்பர் என்றும் ஆன்றோர்களால் அருளப்பட்டுளது. இத்தகைய அறிதுயினிலை மிகுதியும் ஞானநெறியினிற்றலால் முற்றிலும் அதுவேயாக மிஞ்சுதலும் பண்டை ஒன்றுமறியாச் சுழுத்தியென்னும் வெறுமுறக்க நிலை யொழியப் பெறுதலும் கைகூடும்.

**திருமூலர்**

சோம்ப ரிருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வொளியிலே
சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர் கண்டாரச் சுருதிக்கட் டேக்கமே

தூங்கிக் கண்டார்சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வ தெவ்வாறே

சிவசொரூபமாக வுயிர்கட்கு ளுள அறிவாஞ்சான் றினையே தம் வடிவமாகத் தெரிந்து மறந்தும் முன்போல் உடலாதியவற்றைத் தம் வடிவமாகக் கருதாமல் அறிவே தம் மெய்வடிவமாக இடைவிடாமல் நாடியவர் நீங்கற் கரியதெனக்கூறும் பாசமா மாயையும், நல்வினை தீவினை களும், பிறத்தலு மிறத்தலும் ஒழியப்பெறுதலும் ;

அவ்வறிவே தம்வடிவமாக நாடியவர் தம்மிடமாகப் பிறவெல்லாவற்றை யறிதலும், எல்லாவற்றினிடத்தும் தாம்அறிவாக நிறைந்துள்ள அகண்டத் தன்மையையறிதலும், அப்போது பிறிதொன்றும் அறியப்படாமையை யறிதலும் ;

காமாதி குணங்கள் தவிரப்பெறுதலும், ஊழ்வினைகள் ஒழியப்பெறுதலும்; உலக நினைவும் அது நீங்கியபினுளவாகிற அறிவை யறியாத நிலைமையில் உண்டாகிற எல்லாமறந்த மறப்பும் நீங்கப்பொருந்தலும் ;

எடுத்த விப்பிறவியினின்றும் மேனிலை யடையப் பெற்று வதனல் இனிப்பிறவாத் தகைமை யடையப்பெறு

தலும், உலக உடற் கருவிகளின் வசமா யலையப்பெறு தலினின்றும் நீங்கித் தானும் அறிவு மட்டுமாய நிலையால் தனித் திருத்தலும், மனமுதலிய உட்கரணங்களின் தொழிலற்று நிலைத்தலும்;

அறிவை யறிதலில் முதலில் முயன்ற சிறு முயற்சியா நாட்டமும் நீங்கப்பெறுதலும், உடலை நானென்று கருதிய தீமைத் தன்மையுடைய அகங்காரங்கழிதலும், உள்ளத்தில் பொருந்து மூலகப்பற்றி னினைவுகள் கடக்கப்பெறுதலும் வாய்க்கப் பெறுவர்.

போகாத மாயையைப் போக்கிட லாவதும்
புண்ணியபாவம் புறத்திட லாவதும்
ஆகா தழியா திருந்திட லாவதும்
அறிவே வடிவா யிருந்திடி னல்லவோ

என்னிலே யாவையுங் கண்டிட லாவதும்
யாவையு மென்னையுங் கண்டிட லாவதும்
அன்னியங் கண்டிலோ மென்றிட லாவதும்
அறிவே வடிவா யிருந்திடி னல்லவோ

மோகாதி யெல்லா முறித்திட லாவதும்
முற்று முற்கன்மங்க ளற்றிட லாவதும்
ஆகா தழியா திருந்திட லாவதும்
அறிவே வடிவா யிருந்திடி னல்லவோ

இந்தப் பிறப்பினின் றேறிட லாவதும்
ஏகாந்த மாகி யிருந்திட லாவதும்
அந்தக் கரண மறுத்திட லாவதும்
அறிவே வடிவா யிருந்திடி னல்லவோ

நற்செய் தவங்களு மற்றிட லாவதும்
நானெனு மாங்கார நச்சற லாவதும்
அர்ச்சனையெல்லா மறவிட லாவதும்
அறிவே வடிவா யிருந்திடி னல்லவோ

அறிவாயுணருஞ் சிவவடிவ நம்மை நாமறியப்பெற்ற பின் நம்மை நாமறிந்தபடியே யிருப்பது தானாகவே கூடும்.

நம்மையறி வேவடிவா நாங்கண்டோ நம்மையன்றிச்
செம்மை யுலகத் திரள்காணோ—நம்மைநாம்
உற்றுப்பா ராதிருந்தோ மல்லா லொருகாலும்
இற்றுப்போ னோமோ வியாம்

சாயையென வாழ்குடும்பந் தன்னைச் சுமந்தாலு
மாயையெனு மேக மறைத்தாலும்—தூயவெளி
தானாய் விளங்கிச் சகசாட்சி யாயிருக்கு
ஞானாதித் தன்றானே நாம்

ஏதேது வந்தாலு மேதேது செய்தாலும்
ஏதேதி லின்புற் றிருந்தாலும்—ஏதேதுந்
தானாகா வண்ணந் தனியே தெரிந்திருக்கு
ஞானாகா ரந்தானே நாம்

ஏதுசிவா னந்தமோ வேதுசிவா காரமோ
வேது சிவன்செயலோ வென்னாதே—ஏதும்
பிறிவாகா வொன்றாகாப் பேதமா காத
அறிவா நிறைவே யது

தானறியுந் தத்துவங்க ளெல்லாந் தனக்கனியந்
தானதுவே யன்றென்று தள்ளுங்கால்—ஞானமாய்த்
தள்ளுமவ னுயிருக்குந் தன்னாற்றா னென்றுணர்ந்து
கொள்ளுமது வேதாந்த மாம்.

முற்றும்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 29 | 17 | உன்மணிகரு | உன்மணிக்கு |
| 35 | 16 | பாரிந்திரியவ் | பாரிந்தியக் |
| 40 | 3 | தரிசனமா | தரிசனமுமா |
| 53 | 1 | சிவதருமோததரம் | சிவதருமோத்தரம் |
| 54 | 15 | சிவதருமோத்ததம் | சிவதருமோத்தரம் |
| 64 | 15 | வுணறற்பாலது. | வுணரற்பாலது. |